# பொம்மை

பிற்சேர்க்கை

## விளையாட்டுப் படகு (3+)

கேரள அரசு
**கல்வித் துறை**

தயார் செய்தது

**மாநிலக் கல்வியாராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் (SCERT), கேரளம்**
வித்தியாபவன், பூஜப்புரை, திருவனந்தபுரம் - 695 012
Phone: 0471-2341883, 2340323, e-mail: scertkerala@gmail.com

# ஆசிரியர்களுக்கு

விளையாட்டுகள் வாயிலாக புலப்படுபவையும் பழக்கமுள்ள பொருட்களையும் நிகழ்வுகளையும் அடிப்படையாகக் கொண்டு பெற்றுக்கொள்ளும் அனுபவங்கள் வாயிலாக திறன்கள், மதிப்புகள் வளர்ச்சிக்கு மழலையர் பள்ளியில் முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டும்.

குழந்தைகளின் தனி நபர் வேற்றுமை, சமூக கலாச்சார பண்பாடுகளின் இடைவெளி, சமூகத்தில் நிகழ்ந்து கொண்டிருக்கும் மாற்றங்கள் போன்றவைகளைக் கருத்திற் கொண்டு மாநிலக் கல்வியாராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் மழலையர் பள்ளி பாடத்திட்டமும் மழலையர் பள்ளி ஆசிரியர்களுக்கான ஆசிரியர் உதவி கையேடு 'பொம்மை'யும் வடிவமைத்துள்ளது.

உடல் இயக்க வளர்ச்சி, மொழி வளர்ச்சி, அறிவுசார் வளர்ச்சி, சமூக உள வளர்ச்சி, படைப்பு மற்றும் அழகியல் மேம்பாடு போன்ற ஐந்து வளர்ச்சி மண்டலங்களிலாக 86 திறன்கள் நான்கு வயது நிறைவடையும் போது குழந்தைகள் பெற்றிருக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு மழலையர் பள்ளிச் செயல்பாடுகள் திட்டமிடப்பட்டுள்ளது. திறன்களை வளர்த்துவதற்காகக் குழந்தைக்கு அறிமுகமான 30 மையக்கருத்துகளை அடிப்படையாகக் கொண்டு செயல்பாட்டு அனுபவங்கள் ஆசிரியர் வடிவமைக்க வேண்டும். வகுப்புச் செயல்பாடுகள் திட்டமிடுவதற்கான உதவிக் கருவியாக விளையாட்டுப் படகு என்ற மழலையர் பள்ளி ஆசிரியர் பனுவல் தயாரிக்கப்பட்டுள்ளது.

மழலையர் பள்ளி பாட ஏற்பாட்டினுடையவும் ஆசிரியர் பனுவல் 'பொம்மை'யினுடையவும் அடிப்படையில் மழலையர் பள்ளி மாணவர்களுக்காக (3+, 4+) தயாரிக்கப்பட்ட 'விளையாட்டுப் படகு' என்ற பெயரில் உள்ளவை தான் செயல்பாட்டு அட்டைகள். வகுப்பறையில் இந்த அட்டைகளை வழங்குவதற்கான உதவிக் கருவியே இக்கைப்புத்தகம். சுயமாக செயல்பாடுகள் வடிமைக்கவும் செயல்பாட்டு அட்டைகள் விரிவாக்கம் செய்வதற்கும் ஆசிரியர்களுக்குச் சுதந்திரமுண்டு. இந்தப் பனுவலை நன்கு பயன்படுத்துவீர்களல்லவா'

வாழ்த்துகளுடன்,

**முனைவர். ஜெ. பிரசாத்**

இயக்குநர்

## விளையாட்டுப் படகு

## பயிற்சித்தாள் பயன்படுத்தும் போது

மையக்கருத்தின் கருத்துப் பரிமாற்றத்தின் முதற் படியாகவோ, குழந்தையின் சிந்தனைத் திறன், படைப்பாற்றல் போன்றவற்றை ஊக்குவிப்பதாகவோ மையக் கருத்து பரிமாற்றத்திற்குப் பின் குழந்தையின் கருத்து வெளியீடு நடத்துவதற்காகவோ பயிற்சித்தாளைப் பயன்படுத்தலாம். பல்வேறு மையக்கருத்துகளோடு தொடர்பு படுத்தி குறிப்பிட்ட திறன்களின் வளர்ச்சிக்காகக் கொடுக்கப்படும் அனுபவச் செயல்பாடுகளின் தொடர்ச்சியாகவோ, முழுமைப்படுத்துதலாகவோ, மதிப்பிடுவதற்காகவோ இப்பயிற்சித்தாளைப் பயன்படுத்தலாம். சில வாய்ப்புகள் கீழே தரப்பட்டுள்ளன.

- **மையக்கருத்துச் செயல்பாடுகள் → பயிற்சித்தாள் → மையக்கருத்துச் செயல்பாடுகள்.**

மையக்கருத்துடன் தொடர்புடைய அனுபவங்களை அளித்தும் தொடர்ச்சியாகவும் இயல்பாகவும் பயிற்சித்தாள் அளித்தும் தொடர்ந்து செயல்பாடுகளைத் திட்டமிடலாம்.

- **பயிற்சித்தாள் + மையக்கருத்துச் செயல்பாடுகள் → மையக்கருத்துச் செயல்பாடுகள் → பயிற்சித்தாள் → மையக்கருத்துச் செயல்பாடுகள்.**

பயிற்சித்தாளைச் செயல்பாடகவே அளிக்கலாம். அத்துடன் இயல்பாகவே சங்கிலித் தொடராக பிற செயல்பாடுகளைக் கொடுக்கலாம்.

- ஒரு அனுபவக் கருவியாக பயிற்சித்தாளைப் பயன்படுத்தலாம்.
- குழந்தைகளின் பயிற்சித்தாளை ஒன்றுக்கொன்று தொடர்புபடுத்தி அலசி ஆராயவும் வளர்ச்சியை வேறுபடுத்தி அறிவதற்கும் உதவும் வகையில் பயிற்சித்தாளைப் பயன்படுத்தலாம். ஒரு குழந்தையின் தொடர்ச்சியான மாற்றத்தைத்தான் மதிப்பிட வேண்டும்.
- குழந்தை ஈடுபடும் செயல்பாடுகளின் செயல்வரிசையை ஆசிரியை உற்று நோக்கிக் கொண்டிருக்க வேண்டும்.
- குழந்தைகளின் பயிற்சித்தாளை ஒப்புமைப்படுத்தக் கூடாது.
- ஒவ்வொரு குழந்தையினுடையவும் வளர்ச்சி மண்டலங்களின் வேகம் வேறுபட்டதாகும். ஆதலால் குழந்தைகளின் வெளியீடு களை ஒப்புமைப்படுத்தக் கூடாது.
- அளிக்கப்பட்டுள்ள பயிற்சித்தாள்களின் தொடர்ச்சியாகவோ அதன் பிற்சேர்க்கையாகவோ புதிய பயிற்சித்தாளை வடிவமைப்பதற்கான சுதந்திரம் ஆசிரியைக்கு உண்டு.
- குழந்தை பயிற்சித்தாளைப் பூர்த்தி செய்தபின் அதைப் பாதுகாத் தல், மீள்பயன்பாடு போன்றவை குறித்த சரியான அறிவு ஆசிரி யைக்கு இருக்க வேண்டும். பூர்த்தி செய்யப்பட்ட பயிற்சித் தாள்களைப் படைப்புத் தொகுப்பில் பாதுகாக்க வேண்டும்.
- பயிற்சித்தாளை முறைப்படியான கற்றல் முறையில் அணுகக் கூடாது.

## பயிற்சித்தாள்கள் - செயல்பாடுகள்

**பல்வேறு வளர்ச்சி மண்டலங்களுக்கு முக்கியத்துவம் அளிக்கும் பயிற்சித்தாள்கள் இங்கு தரப்பட்டுள்ளன. கீழே விரிவாகவும் கூறப்பட்டுள்ளது.**

### 1. உடல் இயக்க வளர்ச்சி

நுண் தசை வளர்ச்சிக்குத் தேவையான வாய்ப்புகள் எல்லா பயிற்சித் தாள்களிலும் அளிக்கப்பட்டுள்ளன. படம் வரைதல், வண்ணம் தீட்டுதல், உருவாக்குதல் போன்றவை இந்த வளர்ச்சி மண்டலத்திற்கு முக்கியத்துவம் அளிப்பவை. வரைந்து இணைத்தல் வட்டமிடுதல், முன் வரைதல் போன்ற செயல்பாடுகளால் நுண்தசைப் பயிற்சி கிடைக்கிறது. கிழித்தல், வெட்டுதல், ஒட்டுதல், போன்ற அனுபவங்கள் வாயிலாக நுண் தசைகளின் வளர்ச்சி உருவாகிறது.

3+ பருவத்திலுள்ள குழந்தைகளுக்கு நுண் தசைகளின் இயக்கம் குறைவாக இருக்கும். எனவே அவர்களால் செய்ய இயல்கின்ற சிறு சிறு செயல்பாடுகள் தான், விளையாட்டுப் படகில் குறிப்பிடப்பட்டுள்ளன. இது மட்டுமல்லாமல் பெருந்தசை வளர்ச்சிக்காக ஓடுதல், குதித்தல், படிகள் ஏறி இறங்குதல், ஊர்தல், தவழுதல் போன்ற எராளம் அனுபவச் செயல்பாடுகளை வகுப்பறையில் திட்டமிட வேண்டும்.

4+ குழந்தைகளுக்கு இன்னும் அதிகமான நுண் கவனம் தேவையுள்ள செயல்பாடுகள் அளிக்கப்பட்டுள்ளன. எடுத்துக்காட்டாக கத்தரிக்கோல் பயன்படுத்தி துல்லியமாக வெட்டுவதற்கான பயிற்சி. இதற்காக குழந்தை பாதுகாப்பு (child safe) கத்தரிக்கோலைப் பயன்படுத்துவது நன்று. புள்ளிகளை இணைத்து வரைந்து படத்தை முழுமைப்படுத்துதல் தனிப்பட்ட செயல்பாடாகும். ஒன்றாம் வகுப்பில் குழந்தை எழுத்துகளையும் சொற்களையும் வாக்கியங்களையும் எல்லாம் எழுத வேண்டும். அதனால் 4+ ல் வைத்து முன் எழுத்துச் செயல்பாடுகள் ஏராளம் அளித்தல் வேண்டும்.

### 2. மொழி வளர்ச்சி

மழலையர்ப் பள்ளி காலகட்டத்தில் உரையாடலுக்கு மிக முக்கிய பங்குண்டு. கூச்சமும் பயமும் இல்லாமல், தயக்கமின்றி பேசுவதற்காக குழந்தைகளைத் திறமையானவர்களாக்க நாம் முயற்சிக்க வேண்டும். அனைத்து பயிற்சித்தாள்களிலும் இதற்கான வாய்ப்பு உள்ளன.

படம் வாசித்தல், இயற்கை நடத்தல், பொம்மை விளையாட்டு, பாத்திர நடிப்பு, விளையாட்டு, பிற அனுபவச் செயல்பாடுகள் போன்றவற்றில் ஒவ்வொரு குழந்தைக்கும் பேசுவதற்கான வாய்ப்பு அளிக்க வேண்டும். படங்களில் உள்ள நிகழ்வுகளைச் சொல்லுதல், வரைந்ததும் வண்ணம் தீட்டியதுமான படங்களைப் பற்றிக் கூறுதல், பிறர் வரைந்த படங்களின் கருத்துகளைக் கூறுதல், செய்த காரியங்களின் யுக்தியும் காரிய காரணங்களையும் கூறுதல் போன்ற உரையாடலுக்கான பன்முக வாய்ப்புகள் பயிற்சித்தாள் செயல்பாடுகளில் சேர்க்கப்பட்டுள்ளன.

3+ பருவத்தில் தனது வீட்டில் பேசும் மொழி வாயிலாகத்தான் குழந்தைகள் கருத்துப் பரிமாற்றம் நடத்துவார்கள், இச்சூழலில் கேலிசெய்தல், தடை செய்தல், புறக்கணித்தல் போன்றச் செயல்களை ஆசிரியை செய்தல் கூடாது. அது குழந்தையின் தன்னம்பிக்கையைச் சிதைத்து விடும். பேசுவதற்கான ஊக்குவித்தலை அளித்தல் அவசியம்.

4+ பருவத்திற்கு வரும்போது வழக்கு மொழியின்றி இலக்கிய மொழி வளர்ச்சி அடைவதற்கான மாதிரிகைகளும் அனுபவங்களும் அளித்தல் வேண்டும். இதுபோன்ற வாய்ப்புகளை பயிற்சித்தாளில் வழங்கும் போது கவனத்துடன் பயன்படுத்த நம்மால் இயல வேண்டும். இந்த நிலையில் முன்எழுத்துச் செயல்பாடுகள் வழங்கும் முறையில் விளையாட்டுப் படகில் உள்ள பயிற்சித்தாள்கள் முறைப்படுத்தப்பட்டுள்ளன.

## 3. அறிவுசார் வளர்ச்சி

அறிவியல், கணித மண்டலத்திலுள்ள அனுபவச் செயல்பாடுகள் இம்மண்டலத்தில் உட்படுத்தப்பட்டுள்ளன. பெரிது/சிறிது, கூடுதல்/குறைவு, அண்மையில்/தூரத்தில், நீளம் கூடியது/குறைந்தது, உயரம் கூடியது/ குறைந்தது போன்ற முன் – கணிதக் கருத்துகள், பொருட்கள், எண்ணுதல், இணைத்தல் போன்றவை உட்படுத்தப் பட்டுள்ளன. வகுப்பறையில் ஏராளம் நேர்முக அனுபவங்களை அளித்த பிறகு தான் பயிற்சித்தாளைப் பயன்படுத்தவேண்டும்.

உற்று நோக்குதல், ஒப்புமைப்படுத்துதல், ஒற்றுமை வேற்றுமைகள் கண்டறிதல், வகைப்படுத்துதல், கண்டுபிடித்த உண்மைகளை வெளியிடுதல் போன்ற செயல் வரிசைத் திறன்களுடன் தொடர்புடைய ஏராளம் செயல்பாடுகள் விளையாட்டுப் படகில் உட்படுத்தப்பட்டுள்ளன.

படங்களை உற்றுநோக்குதல் மட்டுமே பயிற்சித்தாள் வாயிலாகக் கிடைக்கிறது. அதனால் கண்டறிதல், கேட்டறிதல், முகர்ந்து அறிதல், சுவைத்தறிதல், தொட்டு அறிதல் ஆகிய ஐம்புலன்கள் வாயிலான கற்றல் அனுபவங்கள் கிடைக்கும் வகையிலும் திட்டமிட வேண்டும். யுக்திச் சிந்தனை, காரண காரியத் தொடர்புகளைக் கண்டறிந்து கூறுதல், அடுக்குகள் வடிவமைத்தல், பல வகையான உருவாக்கச் செயல்களில் ஈடுபடுதல், நினைவுப்படுத்திக் கூறுதல் போன்ற அனுபவங்கள் குழந்தைக்குக் கிடைக்க வேண்டும்.

மூன்று வயதினருக்கு இலகுவான முன் கணிதக் கருத்துகள், நிறங்களைப் பிரித்தறிதல், வேறுபாடு அறிதல், படங்களை உற்று நோக்கி அதிலுள்ள நிகழ்வுகளைக் கூறுதல், ஒரே போலுள்ளவைகளைக் கண்டறிதல், குழுவில் சேராதது கண்டுபிடித்தல், அதன் காரணம் கூறுதல் போன்ற செயல்பாடுகள் தான் தரப்பட்டுள்ளன.

நான்கு வயதினருக்கு இவைகளைவிட உயர்தரச் செயல்பாடுகளுடன் 1 முதல் 5 வரையுள்ள எண்ணறிவோடு தொடர்புடைய செயல்பாடுகளும் உட்படுத்தப்பட்டுள்ளன. மாற்றுத் திறனாளிக் குழந்தைகளுக்குகாகத் தரப்பட்டுள்ள செயல்பாடுகளைத்தழுவி பயிற்சித்தாள்களைப் பயன்படுத்தலாம்.

## 4 படைப்பு மற்றும் அழகியல் மேம்பாடு

படம் வரைதல், வண்ணம் தீட்டுதல், உருவாக்கல் போன்ற முக்கியமான செயல்பாடுகள் இம்மண்டலத்தோடு தொடர்பு படுத்தி விளையாட்டுப் படகில் உட்படுத்தப்பட்டுள்ளன. மொழி வாயிலான படைப்பாற்றலுக்கும் வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது.

படம் வரைதல் (சுதந்திரமாகவும், கட்டுப்பாட்டுடனும்), வண்ணம் தீட்டுதல் போன்றவை மேலே கூறப்பட்டுள்ளதல்லவா, பல வகையான உருவாக்கல் வாய்ப்புகளை உட்படுத்துவதற்கு முயற்சி செய்யப்பட்டுள்ளன. மணல் படங்கள், விரல் படங்கள், இலை மிருகக் காட்சி சாலை வடிவமைத்தல், பூக்கள் உருவாக்குதல், அடையாள அட்டை தயாரித்தல், கொடி வடிவமைத்தல், தோரணங்கள் தயாரித்தல் போன்று, கைவிரல் பதித்து படம் உருவாக்கல், இலை அச்சு, பஞ்சு, பென்சில் சீவியதுகள் போன்றவற்றை ஒட்டி, படங்களை முழுமைப் படுத்தல் போன்ற பல்வேறுபட்ட உருவாக்குதல் வாய்ப்புகள் விளையாட்டுப் படகில் உள்ளன.

3+ பருவத்தினருக்குத் தகுந்த எளிமையான உருவாக்கல் செயல்பாடுகள் தரப்பட்டுள்ளன. இச்செயல்பாடுகளை வழங்கும் போது படைப்பு மற்றும் அழகியல் மேம்பாட்டுடன் நுண் – பெருந்தசைகளின் பயிற்சிக்கான வாய்ப்புகளும் உண்டல்லவா. மேலும் சமூக – உள வளர்ச்சிக்கும் இவை பயன்படுகின்றன. ஒற்றுமை மனப்பாங்கும், தலைமை தாங்கும் திறன்களும் அடையும் படியான குழுச் செயல்பாடுகளைத் திட்டமிட வேண்டும்.

4+ பருவத்திலுள்ள குழந்தைகளுக்கு சிறிது உயர் தரத்திலான பயிற்சித்தாள் உட்படுத்தப்பட்டுள்ளது. கத்தரிக்கோல் பயன்படுத்தி

வெட்டவும் ஒட்டவும், காகிதம் பயன்படுத்தி பூக்கள், ஓரிகாமி வடிவங்கள் போன்றவை உருவாக்கவும் வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது. இயற்கையில் இருந்து கிடைக்கும் பொருட்கள், உபயோகமற்ற பொருட்கள் போன்றவற்றைப் பயன்படுத்தி உருவாக்கச் செயல்பாடுகளைச் செய்ய வைக்க வேண்டும். அவ்வாறு செய்தால் மட்டுமே குழந்தையின் படைப்பாற்றல் வளர்ச்சி மேம்படும்.

## 5. சமூக உள வளர்ச்சி

'விளையாட்டுப்படகிலுள்ள செயல்பாடுகள்' அனைத்துமே தனிநபர் செயல்பாடாகும். ஒருவருக்கொருவர் உதவி செய்வதற்கான வாய்ப்புகளையும் உருவாக்க இயலும். வண்ணம் தீட்டுவதற்கான கிரையான்களைக் கொடுத்தும் உருவாக்கச் செயல்பாடுகளில் குழுக்களாகவும் சேர்ந்து ஈடுபடுவதற்கான வாய்ப்புகள் உருவாகுமல்லவா. சில செயல்பாடுகளில் குறிப்பிட்ட நிறமுள்ள கிரையான் தேவைப்படும். எடு: இலைகளுக்குப் பச்சைநிறம் அளித்தல். ஒருவர் வண்ணம் தீட்டி முடியும் வரை காத்து நிற்க குழந்தையை ஊக்குவிக்க ஆசிரியையால் இயலும். கத்தரிக்கோல் பயன்படுத்தி வெட்டும் சூழலிலும் இவ்வாறு காத்து நிற்க வேண்டியது வரும்.

கதைகளில் வரும் மனவெழுச்சிகளைத் தனது மனவெழுச்சிகளுடன் தொடர்பு படுத்துதல் வாயிலாக சமூக உள வளர்ச்சியை உருவாக்க இயலும். பயிற்சித்தாள் வழங்கும் போது கதைக் களம், நிகழ்வு, வகுப்பில் கூறும் கதைகள், பாடல்கள், கதைப் பாடல்கள், பொம்மை நாடகம், பாத்திர நடிப்பு போன்றவை சமூக உள வளர்ச்சிக்காகவும் பயன்படுத்தும்போது தான் ஆசிரியை வெற்றி அடைகிறார்.

## மதிப்பீடு

ஒவ்வொரு வளர்ச்சி மண்டலத்திலும் ஒவ்வொரு குழந்தையும் எந்நிலையில் நிற்கிறார்கள் என்பதை ஆசிரியையால் கண்டறிய இயல வேண்டும். குழந்தையின் தனிநபர் திறன்களை உணர்ந்து தேவை யான ஊக்குவித்தல் அளிக்க இது ஆசிரியருக்கு உதவும். மேலும் தனது திட்டமிடலில் உள்ள குறைகளை உணர்ந்து மேன்மைப்படுத்தவும் மதிப்பிடல் வாயிலாக இயலும். பெற்றோர்கள் தங்கள் குழந்தைக்கு அளிக்கவேண்டிய உதவிகள் என்னென்ன என்பதைக் குறிப்பிட்டுக் கூறவும் ஆசிரியைக்கு உதவுவது தொடர் மதிப்பீடு வாயிலாகப் பெறும் குறிப்புகள் தான்.

ஒவ்வொரு பயிற்சித்தாள்களிலும் என்னென்ன மதிப்பிட வேண்டும் என்று பனுவலில் குறிப்பிடப்பட்டுள்ளது. செயல்பாடுகள் நடக்கும் போது ஆசிரியர் செய்யும் உற்று நோக்கலும் பயிற்சித்தாள் என்ற படைப்பை மதிப்பிடுதல் வாயிலாகவும் தான் தொடர்மதிப்பீடு செய்ய வேண்டியுள்ளது. பெற்றோருடன் உள்ள கலந்துரையாடல் வாயிலாகவும் சில முக்கியமான உற்றுநோக்கல் குறிப்புகள் நமக்குக் கிடைக்கும்.

ஒவ்வொரு பயிற்சித்தாளும் செய்து காட்சிப்படுத்திய பின் குழந்தையின் படைப்புத் தொகுப்புப் பையில் சேர்த்துக் கொள்ள வேண்டும். அதை அலசி ஆராயும் போது குழந்தையின் வளர்ச்சி மண்டலத்தில் ஏற்பட்ட சீரான வளர்ச்சி ஆசிரியைக்கும் பெற்றோருக்கும் புரிந்து கொள்ள முடியும். ஆண்டிறுதியில் இவைகளை ஒருங்கிணைத்து குழந்தையைக் குறித்துள்ள சரியான மதிப்பிடுதல் தயாராக்க முடியாதா?

குழந்தைக்கும் பெற்றோருக்கும் தேவையான பின்னூட்டம் நடத்தி மேன்மைப் படுத்த இதன் வாயிலாக ஆசிரியைக்கு இயலும்.

# மையக் கருத்து 1 குடும்பம்

விளையாட்டுப் படகில் உள்ள பயிற்சித்தாள்கள் செயல் அனுபவங்களாகக் கொடுக்க வேண்டும். மையக்கருத்தை அடிப்படையாகக் கொண்டுள்ள செயல்பாட்டுடன் இணைத்து வெளியிட வேண்டும். இணைப்பதற்கான வாய்ப்பு குறித்து ஒவ்வொரு மையக்கருத்தினுடையவும் முன்னர் இந்த பின்துணை கருவியில் குறிப்பிடப்பட்டிருக்கும். செயல்வரிசையில் பொருத்தமான மாற்றம் செய்ய ஆசிரியைக்கு சுதந்திரம் உள்ளது. படம் வரையும் போது குழந்தைக்குத் தேவையான உதவியைச் செய்ய வேண்டும்.

## செயல்பாட்டு வரிசை

1. குடும்பத்துடன் தொடர்புடைய பாட்டுகள் / கதைகள்.

↓

2. குடும்பத்துடன் தொடர்புடைய படத்தைக் குறித்து விளக்குதல்.

↓

3. பயிற்சித்தாள் 1.1 “எனது குடும்பத்தார்” கொடுத்தல்.

↓

4. கதையில் உள்ள நிகழ்ச்சிகளை நடித்துக் காட்டுதல்.

↓

5. குடும்பத்துடன் தொடர்புடைய பாட்டுகள் பாடுதல். (தனது பெயர் கூறுதல், அம்மாவின் பெயர் கூறுதல்)

↓

6. கதைக் கூற்று வெளியீடு, பயிற்சித்தாள் 1. 2 “நானும் எனது குடும்பமும்” கொடுத்தல்.

↓

7. பெயர் கூறுதல் விளையாட்டு அப்பா, அம்மா, அண்ணன், அக்கா, இவர்களின் பெயர் கூறுதல்.

↓

8. வீட்டுடன் தொடர்புடைய செய்கைப்பாடல், கதை கேட்டல்.

↓

9. குடும்பத்துடன் தொடர்புடைய காரியங்கள் கூறுதல்.

## பயிற்சித்தாள் 1.1 எனது குடும்பத்தார்

**வளர்ச்சி மண்டலங்கள் :**
- மொழி வளர்ச்சி
- உடல் இயக்க வளர்ச்சி

**திறன்கள் :**
1. படங்கள் வரைவதற்கும் வண்ணம் தீட்டவும் இயல்கிறது. (4)
2. படங்களைப் பார்த்து கருத்துகள் கூற இயல்கிறது. (14)
3. படங்களை உற்றுநோக்கி விளக்கங்களும், கண்டறிந்தவற்றையும் சொல்ல இயல்கிறது. (21)

**கருத்து :** அப்பாவும், அம்மாவும், பிள்ளைகளும் சேர்ந்தது தான் குடும்பம்.

**கற்றல் கருவிகள் :** கிரையான்ஸ்

**சூழல் :** குடும்பத்துடன் தொடர்புடைய பாடல்கள் செய்கைப்பாடல்கள் கதைகள் ஆகியவற்றிற்கும் பின்பு குழந்தையின் குடும்ப உறுப்பினர்களைக் குறித்த உரையாடலின் தொடர்ச்சியாக பயிற்சித்தாள் கொடுக்கலாம்.

**செய்முறை**

- **கதைக்கூற்று** : நயனா காலையிலேயே எழும்பினாள். உண்ணிக் குட்டன் அழுகிறான். ஏன் உண்ணி அழுகிறாய்? அழாதே உண்ணி நான் சீக்கிரம் வருகிறேன். அவள் புள்ளிச் சட்டையைப் போட்டாள். வராந்தாவிற்கு வந்தாள். உண்ணிக்குட்டா நீ ஏன் இப்படி அழுகிறாய்?

  “நாம்.... அம்மாவின் வீட்டுக்குப் போகலாம். அழுவதை நிறுத்து செல்லமே... பாட்டி நல்ல கதை சொல்லித்தருவார்கள். ஆகாய மிட்டாயின் கதை‘‘ உண்ணிக்குட்டன் அழுகையை நிறுத்தினான்.

  “அம்மா நாங்கள் பாட்டியிடம் போகிறோம். அதைக் கேட்டு வீட்டிலிருந்தவர்கள் முற்றத்திற்கு வந்தார்கள் யார் யார் வந்திருப்பார்கள்? பிரதிபலிப்பு.

- பயிற்சித்தாள்–1.1 ‘எனது குடும்பத்தார்’ கொடுத்தல்

  ஒவ்வொருவரும் படத்தைப் பார்த்து ஒவ்வொரு காரியம் கூறுதல், கிரையான்ஸ் கொடுத்தல். வீட்டிற்கு வண்ணம் தீட்டுதல். கொடுத்த நிறத்தின் அடிப்படையில் கலந்துரைடயாடுதல். வீட்டின் மேல் கூரைக்கு என்ன நிறம் கொடுக்கப்பட்டது? சுவருக்கு? இவ்வாறு ஒவ்வொரு பொருளையும் குறித்து உரையாடுதல். குழந்தைகள் விரும்பினால் பூக்களையும் செடிகளையும் வரைந்து சேர்க்கலாம். வண்ணம் தீட்டலாம்.

- **கலந்துரையாடல்** :
  - உங்கள் வீட்டில் யார் யார் உள்ளனர்? (சுதந்திர வெளியீடு)
  - ஆசிரியையின் வீட்டு உறுப்பினர்களை அறிமுகப்படுத்துதல் (புகைப்படம்/ படம் வரைந்து கொண்டே)
  - உங்கள் வீட்டில் யார் யார் உள்ளனர்?
  - தனது குடும்பத்தைக் குறித்து குழந்தைகள் உரையாடுதல்.

- **கதைக்கூற்று (தொடர்ச்சி)** அவர்கள் பாட்டியின் வீட்டில் வந்தனர். “யார் இது?” பாட்டிக்கு மகிழ்ச்சியானது. ‘‘பாட்டி... பாட்டி... உண்ணிக்குட்டன் ஆகாய மிட்டாயியின் கதையைக் கேட்க வந்திருக்கிறான்.’’ அப்படியா வாங்க. உள்ளே வாங்க” பாட்டி.... கதை சொல்லித் தருவீர்களா? கதை கேட்க அவசரமா? பாட்டி உண்ணிக்குட்டனை மடியில் உட்காரவைத்து கதை சொல்லத் தொடங்கினாள். ‘‘ஓர் இடத்தில் ஒரு அணில் இருந்தது. ஒரு நாள் அணிலிற்கு ஒரு மிட்டாய் கிடைத்தது. அணில் அதை மரக் கிளையில் கொண்டு வைத்தது. இரவு வந்த போது அந்த மிட்டாய் மின்னத் தொடங்கியது. தங்க நிறம். அணில் பார்த்துக் கொண்டிருக்கும் போதே ஒரு மேகம் மிட்டாயியை எடுத்துச் சென்றது. வானில் கொண்டு வைத்தது. மிட்டாய் வானில் உருண்டு மேற்கு நோக்கிச்

சென்றது. மறுநாளும் அந்த மிட்டாயியை அணில் கிழக்கு வானில் பார்த்தது. அணில் அம்மாவிடம் சொன்னது. “அம்மா, பாருங்க இதோ என் மிட்டாய். நல்ல மிட்டாய். ''அம்புலி மிட்டாய்'' அம்மா கூறினாள். “உண்ணிக்குட்டா நீ அம்புலி மிட்டாய் பார்த்திருக்கிறாயா?” ''வானில் அம்புலி மிட்டாய்'' பாட்டி கேட்டாள்.

**ஆசிரியைக்கு** : உறவுகளைக் குறித்துக் கூறும்போது வட்டாரக் கூற்றுகளைக் கருத்தில் கொள்ள வேண்டும் (பாட்டி, அம்மா, ஆச்சி)

## மதிப்பீடு

- தனது குடும்பத்தினரின் பெயர்/உறவு குறித்துக் கூறுதல்.
- வண்ணம் தீட்டுவதில் நுட்பம்/ஒழுங்கு
- நிறங்களின் பொருத்தம்.

## பயிற்சித்தாள் – 1.2. நானும் எனது குடும்பமும்

**வளர்ச்சி மண்டலங்கள்** :
- உடல் இயக்க வளர்ச்சி
- படைப்பு மற்றும் அழகியல் மேம்பாடு

**திறன்கள் :**
1. கைவிரல், கிரையான் ஆகியன பயன்படுத்தி சுதந்திரமாகப் படங்கள் வரைந்து வண்ணம் தீட்ட இயல்கிறது. (4)
2. பல பொருட்களைப் பயன்படுத்தி அச்செடுக்க இயல்கிறது. (81)

**கருத்து :** குடும்ப உறுப்பினர்கள் (அப்பா, அம்மா, அக்கா, அண்ணன், தாத்தா, பாட்டி) அனைவரும் ஒரே வீட்டில் வாழ்கிறார்கள்.

**கற்றல் கருவிகள் :** ஸ்பாஞ்சு/பஞ்சு, இலை/தட்டு, சாயம்

**சூழல் :** குடும்ப உறுப்பினர்கள் – பாடல் வெளியிட்ட பின்பு

### செயல் முறை

- கதைக்கூற்று : அம்மா துணி துவைக்கிறாள். உண்ணிக்குட்டன் பந்தைத் தட்டி விளையாடுகிறான். பாட்டி வேட்டியில் நீலம் போட்டு தொங்கவிடுகிறாள்.

  “பாட்டி எனக்கு சிறிது நீலம் தருவீங்களா?” நயனா பாட்டியிடம் கேட்டாள். எதுக்கும்மா? பாட்டி கேட்டாள். எனக்குப் படம் வரையணும் “அவள் விரல் நுனியை நீலத்தில் முக்கி காகிதத்தில் பதித்தாள்.“ இது பாட்டி, அப்பா.... ஹாய் எவ்வளவு அழகு.“

  - அவள் யார் யாரை வரைந்திருப்பாள்?
  - ஆசிரியை சார்ட்டில் நயனா வரைந்தது போன்று விரல் நுனியால் படம் வரைதல்.
  - உங்களுக்கும் இதைப் போன்று குடும்பத்தில் உள்ள அனைவரையும் வரைய வேண்டுமல்லவா?
- பயிற்சித்தாள் 1.2. “நானும் எனது குடும்பமும்” வழங்குதல்
  - ஸ்பாஞ்சு/பஞ்சில் நீலத்தை ஊற்றி இலையிலோ தட்டிலோ கொடுத்தல்.

- ஒவ்வொருவரும் நீலத்தில் விரலை அழுத்தி காதிதத்தில் பதித்தல்.
- நீலம் காயந்த பின்பு விரல் படத்தில் கண், மூக்கு, வாய், காது, ஆகியன வரைந்து சேர்த்தல், (அப்பா, அம்மா, அண்ணன், அக்கா.....)
- குச்சிப் படங்கள் வரையும் முறையையும் ஆசிரியை அறிமுகப்படுத்தலாம்.
- ஒவ்வொருவரும் படத்தைக் காட்சிப் படுத்திக் கூறுதல்
- அனைவருடைய படங்களையும் பொதுவாகக் காட்சிப் படுத்தி ரசித்தல்.

## மதிப்பீடு

- படங்களில் விளக்கங்கள் (கண், மூக்கு, காது, வாய்) வரைந்து சேர்க்கப்பட்டுள்ளது.
- படத்தின் கவர்ச்சி, சிறப்பு.

# மையக் கருத்து 2 வீடும் சுற்றுப்புறமும்

பயிற்சித்தாள்களைக் கதைக் கூற்றுடன் கொடுப்பது நன்று. கதைக் கூற்று வெளியீடு பாவனையுடன் முழுமைப் படுத்தும் விதமாகவும் மனதில் படம் உருவாக்க உதவுவதாகவும் அமைய வேண்டும். உருவாக்கச் செயல்பாடுகளாகவோ விளையாட்டுடனோ தொடர்புபடுத்தி வரும்போது அவ்வாறு அல்லாமலும் கொடுக்கலாம். இதைப்போன்ற கருத்துகள் சில தீர்மானங்களிலும் கொடுக்கலாம். எடுத்துக்காட்டாக குடும்பம், வீடு ஆகியவற்றில் உறுப்பினர்களின் காரியத்தை மீண்டும் கூறலாம். ஒவ்வொரு மீள் அனுபவச் சூழலிலும் கூடுதல் விளக்கங்களை நோக்கி கலந்துரையாடல் செல்ல வேண்டும். சுழற்சி முறையிலான செயல் அனுபவங்கள் கருத்து உருவாக்கத்தைப் பலப்படுத்தும். ஒரு காரியம் அதைப் போன்றே மீண்டும் சொல்வதை விட நல்லது புதிய காரணிகளைக் கூடுதலாக சேர்க்க முடிந்த மீள் அனுபவத்திற்கான வாய்ப்புகளை வழங்குதல் நல்லது. கீழே செயல் வாய்ப்புகள் தான் கொடுக்கப்பட்டுள்ளன. பொருத்தமானவற்றைத் தேர்வு செய்து பயன்படுத்தலாம்.

### செயல்வரிசை

1. சுதந்திரமான பேச்சு, அம்மா நல்ல அம்மா (பாடல்).

↓

2. வீட்டைக்குறித்த பாடல். (என்ன நல்ல வீடு)

↓

3. விளையாட்டு – "வீட்டிற்குள் செல்லலாம் நண்பர்களே". (பாடல் பாடி வீட்டிற்குள் செல்லலாம்)

↓

4. குடும்ப உறுப்பினர்களின் அட்டைப் படம் வைத்துக் கூறுதல். (Big Screen)

↓

5. கதை நிகழ்வு – 2.1 ("படம்பார்த்துக் கூறுங்கள்! குடும்ப உறுப்பினர் களுக்கு வண்ணம் தீட்டுங்கள்.") பயிற்சித்தாள் கொடுத்தல்.

↓

6. காகிதம் மடித்து வீடு உருவாக்குதல்.

↓

7. பந்தைக் கைமாறும் விளையாட்டு. தனது பெயர் கூறுதல்.

↓

8. தாத்தாவும், பாட்டியும் – கதை கூறுதல்.

↓

9. கதை நிகழ்வு 2.2 (குழுவில் சேராதது எது?) பயிற்சித்தாள் கொடுத்தல்.

↓

10. அம்மாவைப்பற்றிய பாடல் – "ஓடிச் சேரும் நேரம் என்ன".

↓

11. கதை நிகழ்வு 2.3 (வண்ணம் தீட்டலாம்) பயிற்சித்தாள் கொடுத்தல்.

↓

12. நினைவுபடுத்தலாம், பொருட்களை மாற்றி மீண்டும் விளையாடுதல்.

↓

13. கதைநிகழ்வு, மணல்தடம் உற்றுநோக்கல்.

↓

14. 2.4 (பெரியது எது?) பயிற்சித்தாள் கொடுத்தல்.

↓

15. வீட்டிற்குள்ளே அறைகள். கூறுதல் விளையாட்டு.

↓

16. இயற்கையை உற்று நோக்கி நடத்தல் பார்த்த வீடுகளைக் குறித்துச் சொல்லுதல்.

↓

17. மரத்துண்டுகள் கட்டிட கட்டைகள் போன்றன பயன்படுத்தி உரு வாக்குதல்.

↓

18. சுகாதார பழக்க வழக்கங்களுடன் தொடர்புடைய பொம்மலாட்டத்தைப் பார்த்தல் / விளையாடுதல்.

↓

19. ஜிக்ஸோ – குடும்பம் – ஜிக்ஸோ இணைத்தல்.

↓

20. உயிரினங்கள்/பறவைகள் – கதை கேட்டல், கேட்ட கதை கூறுதல்.

↓

21. வளர்க்கும் உயிரினங்களுக்கு (பறவைகள், மீன்கள்) உணவு கொடுத்தல்.

↓

22. சரியாக கழிவறையைப் பயன்படுத்தும் பயிற்சி.

## பயிற்சித்தாள் – 2.1 படம் பார்த்துக் கூறுங்கள்; குடும்ப உறுப்பினர்களுக்கு வண்ணம் தீட்டுங்கள்.

**வளர்ச்சி மண்டலங்கள்:**
- உடல் இயக்க வளர்ச்சி
- மொழி வளர்ச்சி
- சமூக உள வளர்ச்சி

**திறன்கள் :**
1. படங்களுக்கு வண்ணம் தீட்ட இயல்கிறது. (4)
2. பார்த்தும் கேட்டும் புரிந்து கொண்ட நிகழ்ச்சிகள் அனுபவங்கள் ஆகியன பிறருடன் பகிர்ந்து கொள்ள இயல்கிறது. (16)
3. கதைகள் அனுபவங்கள் சூழல்கள் ஆகியவற்றில் உள்ள கதாபாத்திரங்களை நடிக்க இயல்கிறது. (74)

**சூழல்** : வீட்டைக் குறித்த பாடல், விளையாட்டு ஆகியவற்றுக்குப் பின்பு கொடுக்கலாம்.

**கருத்து** : அம்மா, அப்பா, தாத்தா, பாட்டி, அக்கா அண்ணன், தம்பி, தங்கை ஆகியோர் சேர்ந்து வாழும் இடமே வீடு.

**கற்றல் கருவிகள்** : பயிற்சித்தாள், கிரையான்ஸ்.

**செயல் முறை**

- **கதைக்கூற்று** : இன்று விடுமுறை நாள். ரவியும், மீராவும் விளையாடச் சென்றனர். "ரவி அண்ணா இன்று நாம்/என்ன விளையாட்டு விளையாடலாம்? ஒளிந்து விளையாடலாம்." அதுவேண்டாம். பந்து விளையாடலாம்." அவர்கள் பந்தை எடுத்தார்கள். ரவி பந்தைத் தட்டினான். பந்து உயர எழும்பி கீழே விழுந்து உருண்டது. பூனை பந்தின் பின்னால் ஓடியது. அது பந்தைத் தட்டித் தட்டி உருட்டியது. பந்து உருண்டு உருண்டு பசுவிற்கு அருகில் சென்றது. பசு பந்தை உதைத்தது. பந்து பறந்து மேற்கூரையில் தட்டியது. கிணற்றில் விழுந்தது. அம்மா தண்ணீர் எடுத்து ஊற்றியபோது பானையில் தண்ணீர் விழ வில்லை. ஒரு பந்து விழுந்தது. அம்மா ஆச்சரியப் பட்டாள். அனைவரும் கலகலவெனச் சிரித்தனர்.

- பயிற்சித்தாள் 2.1 "படம் பார்த்துக் கூறுங்கள்! குடும்ப உறுப்பினர்களுக்கு வண்ணம் தீட்டுங்கள்!" வழங்குதல்.
  - படத்தில் என்னென்ன? யாரெல்லாம்? குழந்தைகள் கூறுதல்.
  - ஒவ்வொருவரும் செய்யும் செயலைக் கேட்டல், கூறுதல்.
  - குடும்ப உறுப்பினர்களுக்கு விருப்பம்போல் வண்ணம் தீட்டுதல்.
  - படத்தைக் காட்சிப்படுத்துதல்.
  - குடும்ப உறுப்பினர்களின் செயல்களை ஊமையாக நடித்தல்.

**ஆசிரியைக்கு** : ஆண், பெண் வேறுபாடின்றி அனைவரும் அனைத்து வேலையையும் செய்ய வேண்டுமென கலந்துரையாடல் மூலம் குழந்தைகளுக்குத் தெளிவுபடுத்த வேண்டும்.

## மதிப்பீடு:

- படத்துடன் தொடர்புடைய அனுபவங்கள். நிகழ்ச்சிகளைக் கூற இயல்கிறது.
- வண்ணம் தீட்டியதில் கவர்ச்சி
- மேன்மையான நடிப்பு.

## பயிற்சித்தாள் - 2.2 குழுவில் சேராதது எது?

**வளர்ச்சி மண்டலம்** : அறிவுசார் வளர்ச்சி

**திறன்** : பொருட்கள் /படங்கள் உற்றுநோக்கி குழுவில் சேராததைக் கண்டறியவும், குழுவில் சேராததின் காரணத்தைக் கூறவும் இயல்கிறது. (33)

**கருத்து** : வீட்டில் கட்டில், மேசை, நாற்காலி, பாத்திரங்கள் போன்ற பொருட்கள் உள்ளன.

**கருவிகள்** : பயிற்சித்தாள்

**சூழல்** : வீட்டுக்குப் பயன்படும் பொருட்களை விடுகதை வடிவத்தில் வெளியிடல். எ.கா: நான் ஒரு பொருளின் பெயர் சொல்லுவேன்.
வீட்டில் உள்ளது. நான்கு கால்கள் உண்டு. உட்காரப் பயன்படும், நான் யார்? இதனைப் போன்று பிற வீட்டுப் பொருட்களை அறிமுகப் படுத்துதல்.

**செயல்முறை** :

- பயிற்சித்தாள் 2.2 "குழுவில் சேராதது எது?" வழங்குதல்.
  - பட வாசிப்பு
  - படத்தில் என்னென்ன?
  - இவற்றில் ஒன்று குழுவில் சேராதது அதைச் சுற்றி வட்டமிடுக.
  - குழுவில் சேராதது எதனால் என்று கூறுதல்
  - இந்தப் படத்தைத் தவிர இந்தக் குழுவில் வேறு ஏதேனும் படத்திற்கு யாராவது வட்ட மிட்டுள்ளார்களா?
  - வட்டமிட்டிருந்தால் அதன் காரணம் கூறலாமா?
  - பதில் யுக்திக்கு ஏற்றதெனில் அதை அங்கீகரிக்கவும் பாராட்டவும் செய்தல்.

**ஆசிரியைக்கு** : வீட்டு உபயோகப் பொருட்கள் என்ற கருத்தை உருவாக்க வேண்டும். ஒவ்வொன்றிற்கும்

வெவ்வேறு பயன் உள்ளது. என்ற முறையில் கலந்துரையாடலை ஒருங்கிணைக்க வேண்டும்.

**மதிப்பீடு :**

- குழுவில் சேராதது கண்டறியப்பட்டுள்ளது.
- கண்டறிந்ததன் காரணத்தைச் சொல்ல இயல்கிறது.

## பயிற்சித்தாள் – 2.3 வண்ணம் தீட்டலாம்

**வளர்ச்சி மண்டலங்கள்:**
- உடல் இயக்க வளர்ச்சி
- படைப்பு மற்றும் அழகியல் மேம்பாடு

**திறன்கள் :**
1. பென்சில் / கிரையான் பயன்படுத்தி படங்களுக்கு வண்ணம் தீட்ட இயல்கிறது. (4)
2. இயற்கையை ரசிப்பதற்கும் படத்தின் வாயிலாக வெளிப்படுத்தவும் வண்ணம் தீட்டவும் இயல்கிறது. (79)

**கருத்து :** பல்வேறு தாவரங்கள் வீட்டைச்சுற்றி நட்டு வளர்ப்பதுண்டு.

**கற்றல் கருவிகள் :** பயிற்சித்தாள், கிரையான்ஸ்

**சூழல் :** சுற்றுப்புறத்தில் நடக்கச் சென்றபோது பார்த்த காட்சிகளைக் கூறிய பின்பு அவற்றில் சிலவற்றின் படங்களை வரைதல். பூவின் படம் வரைதல்.

**செயல் முறை**

- **விளையாட்டு :** பூவே பூவே தங்கப்பூவே
என்ன அழகு தங்கப்பூவே
நிறமும் மணமும் உண்டல்லவோ
பெயரைச் சொல்லு தங்கப்பூவே
என ஆசிரியைப் பாடி நிறுத்திய பின்பு ஒரு குழந்தையை நோக்கி விரல் சுட்டுதல். அந்தக் குழந்தை ஒரு பூவின் பெயர் சொல்ல வேண்டும். அந்தப் பூவைக் குறித்து ஒரு காரியம் சொல்ல வேண்டும். தொடர்ந்து ஆசிரியை பாடுதல். விளையாட்டைத் தொடர்தல்.
- பயிற்சித்தாள் 2.3 "வண்ணம் தீட்டலாம்" வெளியிடுதல்.
வண்ணம் தீட்டுதல்.
  - செடித்தொட்டிக்கும் பூவிற்கும் இலைகளுக்கும் வெவ்வேறு நிறம் கொடுத்தல்.
  - அனைவரும் வரைந்த படங்களைப் பொதுவாகக் காட்சிப் படுத்தி ரசித்தல்.

**ஆசிரியைக்கு :** இலைகள் இதழ்கள் ஆகியவற்றை எண்ணிப் பார்ப்பதற்கான அனுபவத்தைக் கொடுக்கும் போது பயிற்சித்தாளின் மீள் பயன் வாய்ப்பைப் பயன்படுத்தலாம். பூக்களுக்குக் கொடுத்த நிறம் குறித்து கலந்துரையாட வேண்டும்.
சிவப்பு நிறமுள்ள பூக்கள் எவை? இவ்வாறு.

**மதிப்பீடு :**

- பூக்கள், இலைகள், பூந்தொட்டி, ஆகியவற்றுக்கு வெவ்வேறு நிறங்கள் கொடுக்கப்பட்டுள்ளன.
- கவர்ச்சியாக நிறம் கொடுக்கப்பட்டுள்ளது.
- பூக்களைக் குறித்த கருத்துகள் வெளியிடப்பட்டுள்ளன.

## பயிற்சித்தாள் – 2.4 பெரியது எது?

**வளர்ச்சி மண்டலம் :** அறிவு சார் வளர்ச்சி

**திறன்:** அளவைக் கருத்தில் கொண்டு பொருட்களை

தரம் பிரித்து ஒழுங்கு செய்ய இயல்கிறது. (41)

**கருத்து** : குடும்ப உறுப்பினர்கள் சேர்ந்து வாழும் இடம் தான் வீடு. (பலவித வீடுகள்)

**கற்றல் கருவிகள்** : பயிற்சித்தாள், கிரையான்ஸ்

**சூழல்** : மணல்தடம் பயன்படுத்தி சொல்லப்பட்ட கதை வெளியீட்டிற்குப் பின்.

**செயல்முறை**

- **நட்பு உரையாடல்** : "காலையில் என்ன சாப்பீட்டீர்கள்?"
  ஒவ்வொருவரிடமும் கேட்டல் ஆசிரியை கரும்பலகையில் ஒரு வட்டம் வரைதல்.
  இன்று நான் சாப்பிட்ட
  உணவுதான் இது. பெயர் கூறலாமா?
  - தோசை, அப்பம், சப்பாத்தி (சுதந்திர பிரதிபலிப்பு)
- **விளையாட்டு** : தொடர்ந்து ஆசிரியர் தரையில் இரண்டு சிறிய வட்டமும், இரண்டு பெரியவட்டமும் வரைதல்
  "வட்டம் வட்டம் வட்டம்
  குதிக்கவும் வட்டத்தில் வேகமாக"
  என ஆசிரியை ராகத்துடன் பாடுதல். ஆசிரியை பெரியவட்டம் எனக் கூறும்போது பெரிய வட்டத்தில் குதிக்க வேண்டும். சிறிய வட்டம் எனக்கூறும் போது சிறிய வட்டத்தில் குதிக்க வேண்டும். தவறாகக் குதித்தால் சே...... சே...... எனச் சொல்ல வேண்டும்.
  தொடர்ந்து பாட்டு பாடுதல்.
  "பெரியது என்ன உண்டு? சிறியது என்ன உண்டு?
  பெரிய யானை உண்டு? சிறிய சேனை உண்டு?
  பெரியது என்ன உண்டு? சிறியது என்ன உண்டு?
  பெரிய சேலை உண்டு. சிறிய துண்டு உண்டு.
  ..........................................................................................
  ..........................................................................................
  இவ்வாறு வரிகள் சேர்த்துப் பாட வேண்டும் தொடர்ந்து,
- பயிற்சித்தாள் 2.4 பெரியது எது? வழங்குதல்.
- **படவாசிப்பு**
  - படத்தில் என்ன உள்ளது?
  - இரண்டு வீடுகளும் ஒரேபோல் உள்ளதா?
  - என்னென்ன வேறுபாடுகள் உள்ளன?
  - எளிய கேள்விகள் மூலம் வீடுகளின் ஒற்றுமை வேற்றுமைகளைக் கண்டறிய உதவலாம். (அறைகள், மேற்கூரை)
  - இவற்றில் பெரிய வீடு எது? தொட்டுக் காட்டட்டும்.
  - சிறிய வீட்டைத் தொட்டுக் காட்டுதல்.
  - வீடுகளுக்கு நிறம் கொடுத்தல், முதலாவது சிறிய வீடு பின்னர் பெரிய வீடு.
  - ஆசிரியை மதிப்பிடுதல்.

## மதிப்பீடு

- பெரியது, சிறியது கண்டு பிடிக்க முடிந்துள்ளது.
- வீட்டிற்கு நிறம் கொடுக்கப்பட்டுள்ளது.
- பொருத்தமான நிறம் கொடுக்கப் பட்டுள்ளது.

## மையக் கருத்து: 3- நானும் எனது உடலும் (தூய்மை)

பயிற்சித்தாள்கள் தனிநபராகச் செய்ய வேண்டும். குறிப்புகள் எளிமையாக அமைய வேண்டும். சிந்திப்பதற்கான வாய்ப்பு கொடுக்கவேண்டும். சுயமாக கண்டுபிடிப்பதற்குரியது எனில் அவர்களே செய்ய வேண்டும். வரைந்து இணைக்கக் கடினமாக இருந்தால் சிந்தனைத் தடையை மேற்கொள்ள உதவும் கேள்விகள் கேட்க வேண்டும். பின்துணை கொடுத்து சரியான முறையில் முழுமைப்படுத்த உதவ வேண்டும்.

### செயல்பாட்டு வரிசை

1. பொம்மை உருவாக்கலாம்.
   (கை, கால், தலையை வேறுபடுத்தக்கூடிய பொம்மைகள். அவற்றை அந்தந்த இடத்தில் பொருத்துதல்)

↓

2. பாட்டு பாடுதல்.

   “எனது குட்டிப் பொம்மை
   தலையை ஆட்டும் பொம்மை
   கையை உயர்த்தும் பொம்மை
   காலை உயர்த்தும் பொம்மை”

   (பாட்டிலுள்ள வரிகளுக்கேற்ப பொம்மையை அசையச் செய்தல்)

↓

3. பொம்மையை எழுப்புவோம்.
   அனைவரது பொம்மைகளும் உறங்குகிறது. (படுக்கச் செய்தல்)
   ஆசிரியை Big picture convase -ல் சூரியனின் படத்தைக் குத்தி வைத்தல். கீழே கோழியின் படம் குத்தி வைத்தல். மேலே யார்/ கீழேயார்?

↓

4. கோழி கூவுவது போலச் செய்தல்.
   (ஆசிரியையும் குழந்தைகளும்)

↓

5. காலைக் கடன்கள்.
   (பொம்மைக்குப் பல் தேய்த்தல் குளிப்பாட்டுதல், சட்டை அணிவித்தல், முடி சீவுதல்................ செய்கையுடன் செய்தல்)
   பாடல்:

   எனது பொம்மை பல் தேய்க்குது
   ............................................ குளிக்குது
   ............................................ சட்டையிடுது
   ............................................ முடிசீவுது

   நல்ல பொம்மையாய் பள்ளிக்குப் போகுது. ஆசிரியர் செய்கை காட்டுவதற்கேற்ப வரிகள் சேர்த்துப் பாடுதல்.

↓

6. பயிற்சித்தாள் 3.1 (நான் தனியாகச் செய்வது) வழங்குதல்.

↓

7. விரல் பொம்மைகளைப் பயன்படுத்தி உரையாடல் கதாப்பாத்திரங்கள்: அம்மா/ஆசிரியை, குழந்தை (கருத்து: நகம் வெட்டுவதன் தேவை) (பயிற்சித்தாள் 3.2 நண்பனைக் கண்டுபிடிப்போம்) வழங்குதல்.

↓

8. சுற்றுப்புறத்தில் நடத்தல். (வகுப்பும் சுற்றுப்புறமும்) உற்றுநோக்கல். (என்னென்ன குப்பைக் கூளங்கள்)

↓

9. வகுப்பில் ஒரு குப்பைக்கூடையை உருவாக்குதல். காகிதப் பெட்டி/ கார்டுபோர்டு பெட்டியை அழகாக்குதல். (சிறுவர் மாதஇதழ் படங்கள், வண்ணக் காகிதம் ஒட்டியது)

↓

10. குப்பைக் கூடையில் என்னென்ன போடலாம்?
கலந்துரையாடல்.
அபியின் அறை (கதைக் கூற்று)
பயிற்சித்தாள் 3.3 (அறையைச் சுத்தம் செய்வோமா?) வெளியிடல்.

↓

11. பொத்தானிடலாம், மடித்து வைக்கலாம் நாமும் செய்வோம், பொத்தானிடல், அடுக்கி வைத்தல். (சட்டைகள் சேகரித்தல்)

↓

12. குழுப்பாடல் - (சுற்றுப்புற சுத்தம் என்ற கருத்து)

↓

13. அபியின் பந்துகள் - பல்வேறு அளவுகளிலுள்ள பந்துகளிலிருந்தும் ஒரே அளவுள்ளவற்றை தேர்ந்தெடுத்து தனிப் பெட்டிகளில் அடுக்குதல்.

↓

14. வரிசைப்படுத்துதல் – அளவுக்கேற்ப பந்துகளை வரிசையாக வைத்தல்.

↓

15. கதை கேட்டல் - (கருத்து, சுத்தமின்மையால் நோய் வருதல்)

↓

16. காணொளிக் காட்சியைக் காணுதல் - பார்த்ததைக் கூறுதல். (சுற்றுப்புற மாசுக்கள்)

↓

17. பயிற்சித்தாள் 3.4 (கையை அழுத்தலாம், வண்ணத்துப்பூச்சியை வரையலாம்.)

↓

18. கை கழுவுதல் விளையாட்டு, கை துடைத்தல் விளையாட்டு.

## பயிற்சித்தாள் - 3.1 நான் தனியாகச் செய்வது.

**வளர்ச்சி மண்டலம்** : அறிவுசார் வளர்ச்சி

**திறன்** : ஆரோக்கிய பழக்கங்கள் சுகாதாரப் பழக்கங்கள் ஆகியன குறித்து அறிதல் (36)

**கருத்து** : உடலைச் சுத்தமாக பாதுகாக்க வேண்டும் (குளிக்க வேண்டும், பல்தேய்க்க வேண்டும், நகம்வெட்ட வேண்டும், சுத்தமான ஆடை அணிய வேண்டும்)

**கருவிகள்** : பயிற்சித்தாள்

**சூழல்** : "எனது குட்டிப் பொம்மை" என்ற பாடலின் தொடர்ச்சியாக வெளியிடலாம்.

**செயல்முறை**:

- **கதைக்கூற்று**: மனுவும் மினியும் ஒரே வீட்டில் உள்ளவர்கள்
அப்பாவும் அம்மாவும் ஆசிரியர்களும்
இவர்களைக் குறித்து நல்லதையே கூறுவார்கள்.
அவர்கள் கெட்டிக்காரர்கள்.... காலையிலேயே எழும்புவார்கள்.
அனைத்து காரியங்களையும் அவர்களாகவே செய்வார்கள்.
அவர்கள் என்னென்ன செய்வார்கள் என்று தெரிந்து கொள்ள வேண்டுமா?
காலையில் முதலாவது செய்தது என்னவாக இருக்கும்?
- பயிற்சித்தாள் 3.1 "நான் தனியாகச் செய்வது" வழங்குதல்
  - படத்தைப் பார்த்துச் செய்யும் காரியங்களைக் கூறட்டும்.

- இவற்றில் நீங்கள் தனியே செய்வது எவையெல்லாம்?
- அவற்றைச் சுற்றி வட்டமிடுங்கள் (தொடர்ந்து செயல்களை, ஊமை நடிப்பாக வெளியிடுதல்.)

## மதிப்பீடு

- படத்திலுள்ள சுகாதாரப் பழக்கங்களைப் புரிந்து கொண்டுள்ளனர்.
- தானாக செய்பவற்றைச் சுற்றி வட்ட மிட்டுள்ளனர்.

## பயிற்சித்தாள் - 3.2 நண்பனைக் கண்டுபிடிப்போம்

**வளர்ச்சி மண்டலம்** : அறிவுசார் வளர்ச்சி

**திறன்** : ஆரோக்கிய பழக்கங்கள்/சுகாதாரப் பழக்கங்கள் ஆகியவற்றைக் குறித்து அறிதல் (36)

**கருத்துகள்** :
- உடலை சுத்தமாகப் பாதுகாக்க வேண்டும்.
- உடலை சுத்தமாகப் பாதுகாக்கா விடில் நோய் வரும்.

**கருவிகள்** : சுகாதாரத்திற்குப் பயன்படுத்தும் பொருட்கள்

**சூழல்** : சுகாதாரப் பழக்கங்களைக் குறித்தும் (குளித்தல் பல்தேய்த்தல், நகம் வெட்டுதல்............ ) இவை கடைபிடிப்பதற்கான பொருட்களைக் குறித்தக் கலந்துரையாடலின் தொடர்ச்சியாக பயிற்சித்தாள் வெளியிடலாம்.

செயல்முறை :

- **கதைக் கூற்று** : ஒரு கதையை ஆசிரியை கூறட்டும். ஓர் இடத்தில் ஒரு வீடு இருந்தது. ஒரு நாள் காலை முதல் வீட்டிலுள்ள அனைவரும் கலங்கினர். அனைவருக்கும் மறதி குணம். பல காரியங்களையும் மறந்தனர். அதனால் அனைத்தும் பிரச்சனையானது. அம்மா சமையலறையில் சோறு பொங்க தண்ணீர் வைத்தாள். ஆனால் தீ பற்ற வைக்க மறந்துவிட்டாள். அப்பா வேலைக்குப்போக சட்டையை அணிந்தார். ஆனால் பொத்தான் மாட்ட மறந்தார். அபி குளித்து விட்டு வந்தாள். கண்ணாடியின் முன்னால் வந்தாள். ஏதோ மறந்தாள். நிவேதிற்குக் குளிக்க வேண்டும் குழாயைத் திறந்தான். வாளியில் தண்ணீர் நிறைத்தான். ஓ..... மறந்துட்டேனே. அபி தோட்டத்துக்குப் போகிறான். நேற்றைய மொட்டு பூவாயிருக்குமா? அவன் திண்ணைக்கு வந்தான். அய்யோ மறந்து விட்டேனே? காலில் மண் படுமல்லவா? அஞ்சு கழிவறைக்குச் சென்று வந்தாள். கையை சுத்தம் செய்ய வேண்டும். தண்ணீர் மட்டும் போதாதே? நிவேதிற்கு பல் தேய்க்க வேண்டும். அவன் பற்பசையை எடுத்தான். அய்யோ மறந்துட்டேனே. ஒவ்வொரு படத்தையும் வைத்து கதாப்பாத்திரங்கள் செய்யப் போவது என்னென்னவெனக் கண்டு பிடித்துக் கூறட்டும். பிரதிபலிப்பு முழுமையான பின்பு பயிற்சித்தாள் வரைந்து இணைத்தால் போதும்.

- படத்தை உற்று நோக்குதல்.

- பயிற்சித்தாள் – 3.2 “நண்பனைக் கண்டுபிடிப்போம்”
- **படவாசிப்பு**
  - படத்தில் பார்க்கும் காரியங்களைக் குறித்துக் கூறுதல்.
  - குளிக்கும் போது உடலைச் சுத்தம் செய்ய பயன்படுத்தும் பொருட்கள் எவை? (சோப்பு, பாசிப்பயறு பொடி, வாகைப் பொடி......) வட்டாரங்களில் பயன்படுத்தப்படும் பொருட்களும் கலந்துரையாடலில் வர வேண்டும்)
  - பல் தேய்க்க ஊரில் என்னென்ன பயன் படுத்துவார்கள்?
    (பிரஷ், பற்பசை. உமிக்கரி மாவிலை...
  - தலைமுடி சீவி சரிசெய்ய?
  - நகம் வெட்டுவதற்கு?
  - கலந்துரையாடலுக்குப் பின் பயிற்சித்தாளில் பொருத்தமானவற்றை வரைந்து இணைத்தல்.
  - சுத்தத்தைக் கடைபிடிக்கவில்லை எனில் என்ன நிகழும்? கலந்துரையாடல் ஒருங்கிணைத்தல்.

## மதிப்பீடு

- பொருத்தமானவற்றை வரைந்து இணைக்க முடிந்தது.
- கலந்துரையாடலில் பங்கு பெற்று தனது கருத்துகளைச் சொல்ல இயல்கிறது.

## பயிற்சித்தாள் – 3.3 அறையைச் சுத்தம் செய்வோமா?

**வளர்ச்சி மண்டலங்கள்** :
- அறிவுசார் வளர்ச்சி
- சமூக வளர்ச்சி
- மொழி வளர்ச்சி

**திறன்கள்** :
(1) ஆரோக்கிய சுகாதாரப் பழக்கங்களைக் குறித்து அறிதல் (36)
(2) பொருட்களுடையவும் நிகழ்ச்சிகளுடையவும் படங்களை உற்று நோக்கி விளக்கங்களையும் கண்டறிந்தவைகளையும் வெளியிட இயல்கிறது (21)

**கருத்து** : – வகுப்பையும் வீட்டின் சுற்றுப்புறத்தையும் சுத்தமாகப் பாதுகாக்க வேண்டும்.

**கருவிகள்** : பயிற்சித்தாள்

**செயல்முறை**

- **கதைக் கூற்று** : அபியின் வீட்டு அறையில் பல பொருட்களும் சிதறிக் கிடக்கின்றன. அபியின் நண்பர்களான பூனையும் நாயும் சேர்ந்து விளையாடுகிறார்கள். தினமும் விளையாடுவதால் ஒன்றையும் அடுக்கி வைப்பதில்லை. காலையில் புத்தகத்தைத் தேடினால் காண்பதில்லை. பென்சிலைத் தேடினால் கிடைப்பதில்லை. “என்ன அபி இப்படி? நானும் உதுவுகிறேன். ஒவ்வொன்றையும் அந்தந்த இடத்தில் வைத்தால் எவ்வளவு அழகாக இருக்கும். அஞ்சு கூறினாள். இருவரும் சேரந்து ஒவ்வொன்றையும் அந்தந்த இடத்தில் வைத்தனர்.

அப்போது பூனை வந்தது. தட்டிவிட்டது.. "அனைத்தும் தகிடுதித்தோம்!" கீழே விழுந்தது. அஞ்சு கம்பை எடுத்தாள் பூனை ஓடியது. அப்போது அங்கே நாய் வந்தது. நாயும் தட்டி விட்டது. எல்லாம் தரிகிடதோம். அஞ்சு கம்பை எடுத்தாள். நாய் அழுது கொண்டு ஓடியது. வெளியே நாயின் அழுகையும். பூனையின் அழுகையும். (போலச் செய்தல்) சிறிது நேரத்திற்குப்பின் இருவரும் பதுங்கிப் பதுங்கி வந்தனர். நாங்கள் நல்ல நண்பர்கள். அடிக்கக் கூடாது. இனி தரிகிடத்தோம் இல்லை. அனைத்தையும் நாங்கள் அடுக்கி வைப்போம். அஞ்சு கூறினாள். நல்லது வாருங்கள் நாம் அனைவரும் சேர்ந்து சுத்தப்படுத்தலாம். இதுதான் அபியின் அறை.

- பயிற்சித்தாள் 3.3 "அறையைச் சுத்தம் செய்வோமா?" வழங்குதல்
- **படவாசிப்பு**
  - படத்தில் என்னென்ன?
  - அவை வைக்க வேண்டிய இடம் எது?
  - ஒவ்வொன்றையும் அதனதன் இடத்தில் வரைந்து இணைத்தல்.

## மதிப்பீடு

- பொருட்களைப் புரிந்துகொண்டு சொல்ல இயல்கிறது.
- ஒவ்வொன்றையும் பாதுகாக்க வேண்டிய இடத்தைப் புரிந்து கொண்டு அந்தந்த இடத்தில் வரைந்து இணைக்க இயல்கிறது.

## பயிற்சித்தாள் - 3.4 கையை அழுத்தலாம்..... வண்ணத்துப் பூச்சியை வரையலாம்.

**வளர்ச்சி மண்டலங்கள்** :
- உடல் இயக்க வளர்ச்சி
- படைப்பு மற்றும் அழகியல் மேம்பாடு

**திறன்கள்** : கைவிரலைப் பயன்படுத்தி படங்கள் வரைதல் (4)

**கருவிகள்** : காகிதத்தட்டு, பஞ்சு/ஸ்பாஞ், வண்ணம், ஸ்கெச் பேனா.

### செயல்முறை

- **கதைக் கூற்று** : ரஹீம் பூந்தோட்டத்திற்கு வந்தான் பூ மலர்ந் துள்ளது. நல்ல பூ அவன் அருகில் வந்தான். கையை நீட்டினான். திடீரென பூ மேல் நோக்கி உயர்ந்தது. ''அய்யோ அது வண்ணத்துப் பூச்சியாக இருந்ததோ!" வண்ணத்துப் பூச்சி கேலியாகச் சிரித்தது. அவன் அறைக்கு வந்தான். காகிதத்தை எடுத்தான். கிரையான் எடுத்தான். வண்ணத்துப் பூச்சியை வரையத் தொடங்கினான். சரியாக வரையவில்லை. அம்மா வந்தார்கள். ரஹீம் வருத்தத்துடன் இருந்தான். மகனே உன் கையில் வண்ணங்கள் உள்ளதல்லவா? 'உள்ளது அம்மா"

''அப்படியானால் வண்ணத்துப்பூச்சியை வரைவது எளிது" அம்மா சொன்னது போன்று அவன் வண்ணத்துப் பூச்சியை வரைந்தான். பறந்து போன வண்ணத்துப் பூச்சி அதைப் பார்த்தது. என்ன அழகு! சிரித்தான். அம்மா சொன்னது போல நாமும் வண்ணத்துப் பூச்சியை வரையலாம்.

- பயிற்சித்தாள் – 3.4 "கையை அழுத்தலாம்", வண்ணத்துப் பூச்சியை வரையலாம்" – வழங்குதல்
    - காகிதத் தட்டில் வண்ணங்களைக் கலக்கி வைத்தல். (ஸ்பாஞ்/பஞ்சு பயன்படுத்தினால் வண்ணக்கலவையைச் சிதறாமல் பாதுகாக் கலாம்)
    - குழந்தைகள் இரண்டு கைகளையும் வண்ணத்தில் அழுத்தி பயிற்சித்தாளில் வண்ணத்துப் பூச்சியின் உடலின் இரு பக்கங்களிலும் வைத்தல்.
    - இப்போது சிறகு உள்ள ஒரு வண்ணத்துப் பூச்சியின் படம் கிடைத்ததல்லவா?
    - காய்ந்த பின்பு ஸ்கெச் பேனாவால் வண்ணத்துப் பூச்சியின் சிறகில் புள்ளிகள் வரைந்து கவர்ச்சியுடையதாக்கலாம்.

## மதிப்பீடு

- படத்தின் கவர்ச்சி

## மையக் கருத்து: 4-மழையும் காலநிலையும்

வண்ணம் தீட்டுவதற்கான செயல்பாடுகளில் குறிப்புகள் தேவைப்படும். படத்தின் எல்லைக் கோட்டின் அருகே சேர்த்து முதலில் வண்ணம் தீட்ட வேண்டும். (கிரையான்ஸ், ஸ்கெச் பேனா, வண்ணக்கலவை (இவை பயன்படுத்தும் போது) எல்லைக் கோட்டுடன் சேர்த்து வண்ணம் தீட்டிய பின்பு அதனோடு சேர்ந்து உள்பகுதிக்கு கவனத்துடன் வண்ணம் தீட்டக் கூற வேண்டும். மாதிரியைக் காட்ட வேண்டும். அங்கும் இங்கும் வரைவதைத் தவிர்க்க வேண்டும். வெவ்வேறான நிறங்கள் அருகருகே கொடுக்க வேண்டிவரும் போது (குடை) கட்டியான நிறமும் இளம் நிறமும் இடைவிட்டுக் கொடுப்பது நன்று.

### செயல்பாட்டு வரிசை

1. மேஜிக் மழை.
   "மழை விழச் செய்தலைப்' பயன்படுத்தி மழை பெய்யச் செய்தல். (பிளாஸ்டிக் குப்பியின் அடியில் ஏராளம் துளைகளும் பக்கங்களில் ஒரு துளையும் இடுதல். குப்பியில் தண்ணீர் நிறைத்து மூடி போடுதல், பக்கத்தில் உள்ள துளையை அழுத்திப் பிடித்தால் தண்ணீர் கீழே விழாது. விரலை அசைக்கும் போது மழை போன்று பெய்யும், இதுதான் சொல்வதைக் கேட்கும் மழை.

↓

2. கேள்வி பதில் பாடல்.
   'மழை பெய்கிறதே! மழை பெய்கிறதே !
   மழையைப் பயந்து ஓடிவிடு
   மழையின் பயம் எனக்கில்லை.
   குடை உண்டு ....... குடை உண்டு
   மழை பெய்கிறதே.......
   தொப்பி உண்டு தொப்பி உண்டு
   கோட்டு உண்டு கோட்டு உண்டு......"
   ஆசிரியை குடை, தொப்பி, கோட்டு இவற்றின் படம் காட்டுவதற் கேற்ப குழந்தைகள் இரண்டு குழுக்களாகப் பாடுதல்.

↓

3. பயிற்சித்தாள் 4.1 "கண்டுபிடிப்போம் வண்ணம் தீட்டுவோம்" வழங்குதல்.

↓

4. குடை கைமாறும் - விளையாட்டு.
   3 பேர் அடங்கிய இரண்டு குழுக்கள், ஒவ்வொரு குழுவிற்கும் விரித்த ஒவ்வொரு குடை. குறிப்பிட்ட இடத்தில் நிற்பவருக்கு ஓடிச் சென்று குடையைக் கொடுத்தல் - முதலாவது முடிக்கும் குழு வெற்றி பெற்றதாகும்.

↓

5. அனுபவம் கூறுதல்.
   விரித்த குடையுடன் ஓடினபோது ஏற்பட்ட அனுபவம். காற்றடிக்கும் போது விரித்த குடையுடன் சென்ற அனுபம் போன்றன.

↓

6. ஸ்டென்சில் குடை உருவாக்குதல், கட்டியான காகிதத்தில் குடை வரைந்து வெட்டியெடுத்தல். ஒவ்வொருவருக்கும் கிடைத்தத் துண்டுகளை ஒட்டி குடை உருவாக்குதல்.

↓

7. ஸ்டென்சில் காகிதத்தில் அழுத்தி வைத்து வெட்டி மாற்றிய காலியான கட்டங்களில் கிரையானைப் பயன்படுத்தி வண்ணம் தீட்டுதல். (இதைப் போன்று தொப்பி, மழைக்கோட்டு)

↓

8. மழைக்கதை கூறுதல்.
(மழை பெய்து முற்றத்தில் தண்ணீர் நிறைந்தது) படகு ஒழுகிப் போனது. ஆற்றில் மீன்கள் – பாதையில் தண்ணீர் தேங்கி நின்றது – வண்டி அழுக்கு நீர் அடித்தது – இவற்றை உட்படுத்தி கதை கூறுதல்.

↓

9. பயிற்சித்தாள் – 4.2 “காகிதப்படகு” வழங்குதல்.

↓

10. படகு உருவாக்குதல்.
முக்கோண வடிவிலான காகிதங்களைக் கொடுத்தல் – மடித்து படகின் வடிவிலாக்குதல். வண்ணம் தீட்டுதல் – Big picture -ல் ஒட்டுதல்.

↓

11. மழைப் பாட்டு பாடுதல்.

↓

12. தவளையின் சத்தத்தைப் போலச் செய்தல்.

↓

13. பயிற்சித்தாள் 4.3 “மழையோ மழை” வழங்குதல்.

↓

14. சூடும் குளிரும் – ஸ்டீல் தம்ளரில் சூடு தண்ணீரும், குளிர்ந்த தண்ணீரும் வைத்தல். தொட்டுப்பார்த்துக் கூறுதல்.

↓

15. மழைக் கையடி

↓

16. வண்ண மழை
கண்ணாடி தம்ளரில் தண்ணீர் நிறைத்து அதன் மீது பொட்டாசியம் பர்மாங்கனேட் போடுதல். அவை தண்ணீரில் தாழ்வதை உற்றுக் கவனித்தல்.

↓

17. சுதந்திரமாகப் படம் வரைதல்.
தரையில் /காகிதத்தில் விருப்பமான படம்வரைதல்.

↓

18. காணொளிக்காட்சி காணுதல்.
மழை, கோடை இவற்றின் காட்சி அனுபவங்கள் அடங்கிய காணொளிக் காட்சியை உற்றுக் கவனித்தல். கலந்துரையாடல்.

↓

19. பயிற்சித்தாள் 4.4 “வண்ணம் தீட்டலாம்” வழங்குதல். (குடைக்கு வண்ணம் தீட்டுதல்)

↓

20. தண்ணீரின் பயன்கள். (பாடல்)

### பயிற்சித்தாள் – 4.1 கண்டுபிடிப்போம், வண்ணம் தீட்டுவோம்.

**வளர்ச்சி மண்டலங்கள்** :
- அறிவுசார் வளர்ச்சி
- உடல் இயக்க வளர்ச்சி

**திறன்கள்** :
1. கணித எண்ணத்தின் அடிப்படையில் உற்று நோக்கி இடமதிப்பைக் கண்டறிதல். (கூடுதலாக உள்ளது) (38)
2. கணிதப்பிரச்சனைகளுக்குத் தீர்வு காண இயல்கிறது. (கூடுதல் குறைவு கண்டறிதல்) 46.
3. கிரையான் பயன்படுத்தி வண்ணம் தீட்ட இயல்கிறது (5)

**கருத்துகள்** :
- மழை பெய்யும் போது ஏராளம் தண்ணீர் கிடைக்கிறது.

- மழை பெய்யும் காலமும் மழை பெய்யாத காலமும் உள்ளது.

**கருவிகள்** : கிரையான்கள் /ஸ்கெச் பேனா

**சூழல்** : அம்முவும், மீனுவும், நிம்மியும் மழையில் குடைபிடித்து நடக்கின்றனர் "ஹாய்! எவ்வளவு அழகு. மழையில் நடப்பதற்கிடையே குடையை வட்டமாகச் சுழற்றிக் கொண்டு அம்மு கூறினாள். அதனைக் கண்டு பிறரும் அதைப் போன்று செய்தனர். அம்முவின் குடைக்கு நீல நிறம், மீனுவிற்கு பெரிய குடை, வளைந்த கால் கொண்ட குடை நிம்மிக்கு... மழையோடும் மழை நனையாமலிருப்பதற்கான பொருட்களோடும் தொடர்புடைய கேள்வி பதில் பாடலுக்குப் பின் வெளியிடல்.

**செயல் முறை**

- **கதைக் கூற்று** : நண்பர்கள் அனைவரும் கழிவறைக்குச் சென்று விட்டு வந்துள்ளனர். திடீரென மழை பெய்தது. சிலர் குடை எடுக்கவில்லை. நண்பர்களின் குடைக்குள் ஓடிச் சென்றனர். மழைக்கும் குடைக்கு கீழ் செல்ல ஆசை. காற்று மழைக்கு உதவியது. மழை குடைக்குக் கீழ் சென்றது. குழந்தைகள் நனைந்தனர். 'மழையில் நனைந்தால் காய்ச்சல் வரும்" குழந்தைகள் கூறினர். உடல் முழுதும் தண்ணீர். குடை, குடை, குடை என மழை கூறியது. மழை உதறினாலும் போகாது. நனைந்தது பார்த்தாயா? "என்னை விருப்பமில்லையெனில் நான் போய் விடுகிறேன். "மழை கூறியது. மழை போய்விட்டது. குழந்தைகள் குடையை மடக்கினர். இந்த நேரம் மறைந்து நின்ற மழை மீண்டும் பெய்தது. குழந்தைகள் ஓடி குடைக்குக் கீழ் சென்றனர். அப்போது மழை நின்றது. குடையை மடக்கினர். மழை பெய்தது. மழை விளையாட்டைத் தொடர்ந்தது. படம் பார்க்கவும்.
- பயிற்சித்தாள் – 4.1 "கண்டு பிடிப்போம் வண்ணம் தீட்டுவோம் வழங்குதல்.
- **படவாசிப்பு**
  - படத்தில் என்னென்ன? கூறுதல்
  - அனைத்து குடைகளிலும் குழந்தைகளின் எண்ணிக்கை ஒரே போல் உள்ளதா?
  - எந்தக் குடையில் கூடுதல், குழந்தைகள்?
  - அந்தப் படத்திற்கு வட்டம் வரைதல்.
  - குடைகளுக்கு வண்ணம் தீட்டுதல்.

## மதிப்பிடல்

- படத்தில் என்னென்ன எனக் கூற முடிகிறது.
- எண்ணிக்கை கூடுதல் உள்ள குடைக்கு வட்டம் வரையப்பட்டுள்ளது.
- குடைக்கு வண்ணம் தீட்டப்பட்டுள்ளது.

## பயிற்சித்தாள் – 4.2 காகிதப்படகு

**வளர்ச்சி மண்டலம்** : உடல் இயக்க வளர்ச்சி

**திறன்** : கிரையான் பயன்படுத்தி வண்ணம் தீட்ட இயல்கிறது (4)

**கருத்துகள்** :

- மழை உள்ள காலமும் மழை இல்லாத காலமும் உள்ளது.

- மழையுடன் காற்று, இடி, மின்னல் ஆகியன ஏற்படுகிறது.
- மழை பெய்யும்போது ஏராளம் தண்ணீர் கிடைக்கிறது.

**கருவிகள்** : கிரையான்ஸ்

**சூழல்** : மழையுடன் தொடர்புடைய கதை வெளியிட்ட பின்பு பயிற்சித்தாள் கொடுத்தல்.

**செயல்முறை**

- **கதைக்கூற்று** : காலை முதல் மழையோ மழை! ரிங்குவும் ரிஜுவும் வெளியே செல்ல இயலாமல் வீட்டிற்குள் இருந்தனர். என்ன குளிர்? அவள் போர்வையால் மூடிக்கொண்டாள். டம்...... டம்.... டம்..... சன்னல் வழியாக வெளிச்சம் வந்தது. சத்தமும் கேட்டது. பயந்து போனார்கள். இடியும் மின்னலும் விட்டு விட்டு ஏற்பட்டது. சன்னல் வழியாகப் பார்த்தனர். காற்றில் மரங்கள் அசைந்தாடியது. நிற்காத மழை. சிறிது நேரத்திற்குப் பின் மழை நின்றது. முற்றத்தில் தண்ணீர். சிவப்பு நிறத்தில் தண்ணீர். வாய்க்காலை நோக்கிப் பாய்ந்தது. ரிங்கு, நாம் படகு செய்யலாமா? வாய்க்காலில் விடலாம். உருவாக்கிய காகிதப் படகுகளுடன் இருவரும் வாய்க்காலின் அருகேச் சென்றனர்.
- பயிற்சித்தாள் – 4.2 "காகிதப் படகு" கொடுத்தல்
- **படவாசிப்பு** : ரிங்குவையும் ரிஜுவையும் பார்த்தீர்களா? படத்தில் வேறு என்னென்ன?
  - படகுகளுக்கு மட்டும் வண்ணமில்லை. நாம் வண்ணம் தீட்டுவோமா?
  - படகுகளுக்கு வண்ணம் தீட்டுதல்
- **கதைக்கூற்று** (தொடர்ச்சி) : ரிங்குவும் ரிஜுவும் படகை வாய்க்காலில் விட்டனர். அப்போது ஒரு மீன் படகில் ஏறியது. நன்றாக இருக்கிறது! ஒரு தவளை ரிஜுவின் படகிலும் ஏறியது. நீர்ப்பாம்பு இதைப் பார்த்தது. தவளை குதித்தது. மீன் படகை வேகமாக செலுத்தி தூரமாகச் சென்றது. பயந்த குழந்தைகள் அம்மாவின் அருகில் ஓடினர்.

## மதிப்பீடு

- படத்தில் உள்ளதைப் புரிந்துள்ளனர்.
- படகுகளைக் கண்டறிந்து வண்ணம் தீட்டப் பட்டுள்ளது.
- படகுகளுக்கு சரியாக வண்ணம் தீட்டப் பட்டுள்ளது.
- படத்தின் காட்சிகளைக் கூற இயல்கிறது.

## பயிற்சித்தாள் – 4.3 "மழையோ மழை"

**வளர்ச்சி மண்டலங்கள்** :
- அறிவுசார் வளர்ச்சி
- உடல் இயக்க வளர்ச்சி

**திறன்கள்** :
1. கணிதப் பிரச்சனைகளுக்குத் தீர்வுகாண இயல்கிறது. (பெரியது எதுவெனக் கண்டறிதல்) (46)
2. கணித எண்ணத்தின் அடிப்படையில் உற்று நோக்கி இட மதிப்பு கண்டறிதல். (38)

3. கிரையானைப் பயன்படுத்தி வண்ணம் தீட்ட இயல்கிறது. (5)

**கருத்துகள்** :
- மழை பெய்யும் போது ஏராளம் தண்ணீர் கிடைக்கிறது.
- மழைக்காலத்தில் செடிகள் வளர்கிறது.
- மழை பெய்யும் போது தண்ணீர் உருவாகிறது.

**கருவிகள்** : கிரையான்ஸ்

**சூழல்** : தாமரைக் குளத்தில் பச்சைத் தவளை வாழ்ந்து வந்தது. ஒரு நாள் பூக்களுக்கிடையே குதித்து நடந்தது பச்சைத் தவளை. அப்போது நல்ல மழை பெய்தது. தவளை அண்ணனின் சத்தத்தைப் போலச் செய்தபின் பயிற்சித்தாள் வழங்குதல்.

**செயல்முறை**

- **கதைக்கூற்று** : ரிங்குவினுடையவும் ரிஜுவினுடையவும் படகுகள் வாய்க்காலில் போட்டியிட்டுக் கொண்டு பாய்ந்தன. "நான் முன்னால் செல்வேன்; நான் முன்னால் செல்வேன்" அவர்கள் கூறினர். தவளை தாமரைப் பூக்களுக்கிடையே மழை நனையாமலிருக்க இலையைப் பிடித்துக் கொண்டிருந்தது.

"அதென்ன பாய்ந்து வருகிறது. காகிதப் படகு அல்லவா?" பெரிய தாமரைப் பூவைக் கடந்து படகுகள் பாய்ந்துவந்தன. அவற்றின் போட்டி தவளைக்குப் பிடிக்கவில்லை, தவளை குதித்தது. படகுகள் இரண்டும் மூழ்கியது. தவளையும் கூடவே மூழ்கிச் சென்று படகுகளை எடுத்து இலையில் வைத்தது. "வெயில் வரும். அப்போது காய்ந்து விடும். அப்போது இருவரும் சேர்ந்து செல்லுங்கள்'' தவளை கூறியது. படகுகள் வெயிலைக் காத்து இருந்தன. வெயில் வந்தது. காரியத்தைக் கேட்டது. நான் காயச் செய்தால் பிரச்சினை தீருமா? ஆம். "அப்படியென்றால் வருகிறேன்'' வெயில் கூறியது. அப்போது காற்று அந்த வழியாக வந்தது. இரண்டு படகையும் கரைக்குக் கொண்டு வந்தது. ரிங்குவும் ரிஜுவும் வந்து படகுகளை எடுத்துக் கொண்டனர்.

- பயிற்சித்தாள் – 4.3 "மழையோ மழை" வழங்குதல்
- **படவாசிப்பு**
  - பெரிய பூ எது? கண்டு பிடித்து வண்ணம் தீட்டுங்கள்.
  - படத்தில் வேறு என்னென்ன உள்ளது?
  - பிரதிபலித்தல்.
  - பச்சைத்தவளை எதற்கு இலையைத் தலைக்குமேல் பிடித்திருந்தது?
  - எவ்வாறு மழை பெய்கிறது?
  - மழைத்துளிகளைப் பார்த்ததுண்டா?
  - படத்தில் மழைத்துளிகளை வரைந்து சேர்த்தல்.

## மதிப்பீடு

- மழைத்துளிகள் சரியாக வரைந்து சேர்க்கப் பட்டுள்ளன.
- பெரிய பூவிற்கு நிறம் கொடுக்கப்பட்டுள்ளது.

## பயிற்சித்தாள் - 4.4 “வண்ணம் தீட்டலாம்”

**வளர்ச்சி மண்டலங்கள் :**
- படைப்பு மற்றும் அழகியல் மேம்பாடு
- உடல் இயக்க வளர்ச்சி

**திறன் :** கிரையான் பயன்படுத்தி சுதந்திரமாகப் படங்களுக்கு வண்ணம் தீட்ட இயல்கிறது. (4)

**கருவிகள் :** கிரையான்ஸ்

**சூழல் :** மழையுடன் தொடர்புடைய அனுபவத்தைக் கூறுதல். வகுப்பில் குடைகளின் கண்காட்சி ஒழுங்கு செய்தல். தொடர்ந்து கோடைக் காலம்/ மழைக்காலம் ஆகியன குறித்த காணொளிக் காட்சி பார்த்த பிறகு கலந்துரையாடுதல்.

### செயல் முறை

- **கதைக் கூற்று :** ரிங்கு, யானை அளவான பெரிய வண்ணக் குடையில் ஏறி வானில் பறக்கிறான். “ஹாய் அதுதானே எனது பள்ளி” ஒவ்வொரு காட்சிகள் அதோ வீட்டோடு சேர்ந்து ஓடும் வாய்க்கால்”. அது பாய்ந்து வயல் வழியாகச் செல்கிறது. வாய்க்காலிற்கு எவ்வளவு நீளம்! வயலிலும் தண்ணீர்... எவ்வளவு அழகு அய்யோ! தாத்தா தாடி போன்று. ரிங்கு பறந்து சென்றான். இப்போது அந்த மரக்கிளையில் தட்டி எனது குடை உடைந்து போகும். மரக்கிளைக்கு அருகில் குடை வந்து கொண்டிருந்தது. மரக்கிளையில் இடிக்காமல் இருக்க ரிங்கு வலது பக்கமாக மாறிச் சென்றான். கீழே விழுந்தான், திடீரென அவன் விழித்துக்கொண்டான். கட்டிலிலிருந்து கீழே விழுந்திருந்தான். எழும்பி உட்கார்ந்தான். அம்மா அருகிலேயே இருந்தார். ரிங்கு தூக்கத்தில் கனவு கண்டு கொண்டிருந்தான். ரிங்கு கனவில் பார்த்த தனது அற்புதக் குடையை வரைந்தான்.
- பயிற்சித்தாள் - 4.4 “வண்ணம் தீட்டலாம்” வழங்குதல்.
  - அய்யோ! ரிங்குவின் குடைக்கு வண்ணம் இல்லை. நாம் வண்ணம் தீட்டுவோம்.
  - குடைக்கு வண்ணம் தீட்டுதல்.
  - ஆசிரியை வண்ணம் தீட்டுவதற்குத் தேவையான குறிப்புகள் கொடுத்தல்.
  - குழந்தைகள் வண்ணம் தீட்டுதல், படங்களைக் காட்சிப்படுத்துதல்.

### மதிப்பீடு

- கவர்ச்சியுடன் வண்ணம் தீட்ட இயல்கிறது.

## மையக் கருத்து: 5-தாவரங்கள் பழங்கள்

பொருட்களைப் பயன்படுத்தியதால் கிடைக்கப்பெற்ற அனுபவம், அனுபவத்தை அடிப்படையாகக் கொண்ட உரையாடல், படத்தை அடிப்படையாகக் கொண்ட அனுபவம், இறுதியில் எண்களை பன்படுத்தியதால் கிடைத்த அனுபவம் என்றவரிசையில் கணிதத்தில் கருத்து உருவாக்கச் செயல்முறை. கணிதத்துடன் தொடர்புடைய பயிற்சித்தாள் கொடுக்கும் போது இதை மனதில் கொள்ள வேண்டும். புலம்படும் பொருட்களைப் பயன்படுத்திய பின்பு மட்டுமே படத்திற்கு/ பயிற்சித்தாளிற்குச் செல்ல வேண்டும்.

### செயல்பாட்டு வரிசை

1. பழங்களை உற்று நோக்கல்.
↓
2. வீட்டில் பயன்படுத்தும் பழங்களையும் அவற்றின் சிறப்புகளையும் தங்களது அனுபவங்களின் அடிப்படையில் கூறுதல்.
↓
3. சிறப்புகளை உற்றுக் கவனித்துக்கூறுதல் (நிறம், மணம், சுவை, அளவு...)
↓
4. பயிற்சித்தாள் 5.1 “வரைந்து இணையுங்கள்” வழங்குதல்.
↓
5. பெருமை பேசுதல். (பொம்மலாட்டம்)
↓
6. பல்வேறு பழங்கள் சாப்பிடுதல். (நடிப்பு)
↓
7. பழங்களுடன் தொடர்புடைய பாடல்.
↓
8. பழங்களை வகைப்படுத்துதல். (குழுவில் சேராதது, சுட்டிக்காட்டுதல், காரணம் கூறுதல்)
↓
9. பயிற்சித்தாள் 5.2 ‘வண்ணம் தீட்டுவோம் எண்ணிச்சொல்வோம் வழங்குதல்.
↓
10. பழங்களை எண்ணிக் கூறுதல். (நேரடி அனுபவம்3 வரை)
↓
11. பழங்களுடன் தொடர்புடைய பாட்டுகள் / கதைகள்.
↓
12. பயிற்சித்தாள் 5.3 “படத்தில் என்னென்ன? வண்ணம் தீட்டுங்கள் வழங்குதல்.
↓
13. பழங்கள் வரைதல், வண்ணம் தீட்டுதல்.
↓
14. பழங்களுடன் தொடர்புடைய கதைகள்.

### பயிற்சித்தாள் – 5.1 வரைந்து இணையுங்கள்

**வளர்ச்சி மண்டலம்**: அறிவுசார் வளர்ச்சி

**திறன்** : ஐம்புலன்களைப் பயன்படுத்தி பொருட்கள் உயிரினங்கள் ஆகியவற்றை உற்று நோக்கி சிறப்புகளைக் கண்டிபிடிக்கவும், வாய்மொழியாக வெளியிடவும் இயல்கிறது. (வண்ணம், வடிவம், அளவு, மணம், சத்தம், சுவை, பளபளப்பு)

**கருத்து** : பலவகைப் பழங்கள் உள்ளன.

**கருவிகள்** : பலவகையான பழங்கள், கிரையான்ஸ், பாடல்கள்.

**சூழல்** : பலவகைப் பழங்களை அறிமுகப்படுத்துவதற்கான வாய்ப்பு.

**செயல் முறை**

- **கதைக்கூற்று** : ஒரு விடுமுறை நாள் லிஸா கூறினாள். "எனக்கு மாம்பழப் புளிசேரி வேண்டும்."
  "மகளே மாம்பழம் தீர்ந்துவிட்டது. நாளை சந்தைக்குப் போகும்போது அம்மா வாங்கித் தருகிறேன்.
  லிஸாவுக்கு சமாதானம் ஆனது. சந்தையில் சங்கு மாமாவின் பழக்கடை உள்ளது. சங்கு மாமா, அறைகள் உள்ள பெட்டியில் தான் பழங்களைப் பாதுகாப்பாக வைத்திருப்பார். இரவு தூங்கும் போது மாம்பழப் புளிசேரியின் காரியத்தை லிஸா நினைத்தாள். "ஹாய் நாளை மாம்பழப் புளிசேரி.... என்ன சுவை?
  இரவில் லிஸா ஒரு கனவு கண்டாள். சங்கு மாமாவின் கடைக்கு முன்னால் லிஸாவும் அம்மாவும் நின்றனர்.
  லிஸாவுக்கு ஒரு குறும்பு தோன்றியது.
  "பாட்டு கேட்டால் பழங்கள் பெட்டியிலிருந்து வருமா?
  பாடிப் பார்ப்போமா? லிஸா பாடினாள் (ஏற்று பாடுங்கள்)

  "கொய்யா மரத்தில் கொய்யாக்காய்
  மினு மினுக்கும் கொய்யாக்காய்
  விளைந்து பழுத்த கொய்யாக்காய்
  என்னே மணம் கொய்யாக்காய்
  கீழே இறங்கி வந்திடட்டும்"
  என்ன நடந்திருக்கும்?

  (சுதந்திர பிரதிபலிப்பு)

  கொய்யாக்காய் பெட்டியிலிருந்து உருண்டு கீழே விழுந்தது.
  லிஸா மீண்டும் பாடினாள்
  'மாவின் கண்ணே மாம்பழம் அண்ணா
  மூக்கைத் துளைக்கும் மணமுள்ள
  மாம்பழத்தை நான் கண்டேன்
  கீழே இறங்கி வந்திடட்டும்.

  மாம்பழம் என்ன செய்தது?
  ஒரு மாம்பழம் உருண்டு கீழே வந்தது.
  லிஸா நன்கு ரசித்தாள்.
  லிஸா மீண்டும் பாடினான்.
  "நீண்டு தடித்த பப்பாளி
  உதடு சிவந்த பப்பாளி
  வேகம் குதித்து வந்திடட்டும்"
  பப்பாளி ஒன்று உருண்டு கீழே வந்தது. லிஸா பூசணியைக் குறித்துப் பாடினாள் எவ்வாறு பாடியிருப்பாள்.
  "தடித்து உருண்ட பூசணிக்காய்
  உருண்டு உருண்டு வந்திடட்டும்."
  பூசணிக்காய் உருண்டு உருண்டு கீழே வந்தது.
- பயிற்சித்தாள் 5.1 "வரைத்து இணையுங்கள்" கொடுத்தல்.
  லிஸா பார்த்த கனவு பிடித்திருக்கிறதா?

மாம்பழமும், கொய்யக்காயும், பூசணிக்காயும், பப்பாளியும், இதோ தரையில் கிடக்கிறது. இவர்களை மீண்டும் பெட்டியில் அவற்றின் அறையில் வைக்க வேண்டாமா/ மாம்பழத்தின் அறையைக் கண்டுபிடியுங்கள். அறையுடன் இணையுங்கள் பாப்பாளியைக் கண்டுபிடித்து அறையில் சேருங்கள்.
வரைந்து இணைப்பவர்களை உற்சாகப்படுத்துங்கள்.

- கூடையில் உள்ள பல வண்ணப் பழங்களைப் பார்த்து பழங்களுக்குப் பொருத்தமான வண்ணம் தீட்டுதல்.
- படத்தில் உள்ள காரியங்களைக் குறித்து தனது மொழியில் கூறுதல்.
- பழங்களை விற்பவன் எவ்வாறு கூவி விற்பான்? நடித்துக் காட்டுங்கள்.
- படங்களைக் கைமாற்றி ஒருவருக்கொருவர் மதிப்பிடல். தொடர்ந்து வெவ்வேறு பழங்களின் கூட்டங்களை உற்று நோக்குதல். பழப் பாடல்களைப் பாடுதல்.

## மதிப்பீடு

- பழங்களை அந்தந்த அறையில் வரைந்து சேர்க்கப்பட்டுள்ளது.
- பொருத்தமான நிறம் கொடுக்கப்பட்டுள்ளது.
- படத்தில் உள்ள காரியங்கள் தங்களது மொழியில் கூறுகின்றனர்.
- பழங்களைப் புரிந்து கொண்டு பெயர்களைக் கூறுகின்றனர்.
- பொருத்தமான வண்ணம் தீட்டப்பட்டுள்ளது.

## பயற்சித்தாள் 5.2 வண்ணம் தீட்டுவோம் எண்ணிச் சொல்வோம்.

**வளர்ச்சி மண்டலங்கள்** :
- அறிவு சார் வளர்ச்சி
- உடல் இயக்க வளர்ச்சி

**திறன் :** எண்களை எண்ணவும், எண்களையும் பொருட்களின் எண்ணிக்கையையும் இணைக்கவும் இயல்கிறது. (5 –ற்கு கீழ்) (44)

**கருத்து** : பலவகைப் பழங்கள் உள்ளன.

**கருவிகள்** : கிரையான்ஸ்

**சூழல்** : பலவகைப் பழங்களை அறிந்து கொண்ட பின்பு பயிற்சித்தாள் வெளியிடல்.

**செயல்முறை**

**கதைக் கூற்று** : லிஸா மாமாவைப் பார்க்கக் காத்திருந்தாள். மாமா பாட்டியை பார்க்க வருவார். லிஸா பாட்டியின் அருகில் ஓடினாள். மாமா என்ன கொண்டு வருவார்? லிஸா கேட்டாள். அன்னாசிப் பழம், மாமாவின் தோட்டத்தில் அன்னாசிப்பழம் உள்ளது.'' ஹாய் அன்னாசிப்பழம். லிஸா குதித்தாள். லிஸா அன்னாசிப்பழம் சாப்பிட்டதுண்டு.
பாட்டி..... பாட்டி...... எனக்கு அன்னாசிப் பழத்தின் பாடலைக் கேட்க வேண்டும். லிஸா பாட்டியிடம் கூறினாள், "பாடுகிறேன் கண்ணே! பாட்டியின் பாடலோடு நாமும் பாடலாம்.

"அன்னாசியாம் அன்னாசி
அழகு நிறைந்த அன்னாசி
செடிக்கு மேலே பழமுண்டு
பழத்து மேலே தொப்பியுண்டு
தொப்பி முழுதும் முள்ளுண்டு
பருபருத்த சட்டையிட்டு
பார்த்துப் பார்த்து சிரித்திடும்
நன்றாய் விளைந்த பழமிது.
முகர்ந்தால் மூக்கில் மணத்திடும்
சட்டை தொப்பி நீக்கினால்
உள்ளே இருப்பான் சுவையுடனே!"

லிஸாவின் மாமா வந்தார். பாட்டியைப் பார்த்தார். லிஸாவுக்கு ஒரு சிறிய பையைக் கொடுத்தார். லிஸா பையைப் பார்த்தாள். பையில் பழங்கள், பையிலுள்ள பழங்களை நீங்கள் பார்க்க வேண்டாமா?

- பயிற்சித்தாள் 5.2 "வண்ணம் தீட்டலாம் எண்ணிச் சொல்வோம்". வழங்குதல்.

குழந்தைகள் புரிந்து கொண்டு கூறுதல் (சரியான விடைகளுக்கு உற்சாகப் படுத்துதல்) இனி வண்ணம் தீட்டலாமா? குழந்தைகள் வண்ணம் தீட்டுதல். குழந்தைகளுக்கு விருப்பமான பழங்கள் வரைந்து வண்ணம் தீட்ட வாய்ப்பு கொடுத்தல்.

- படத்தில் என்னென்ன பழங்கள் உள்ளன?
- எத்தனை அன்னாசிப்பழங்கள் உள்ளன.
- மாம்பழங்கள் எத்தனை உள்ளன?
- வாழைப்பழம் எத்தனை உள்ளன?
- ஒவ்வொன்றையும் தொட்டு எண்ணிக் கூறுதல்.
- மிகவும் கூடுதலாக உள்ளது எது?
- அதைச் சுற்றி வட்டமிடுக.
- பயிற்சித்தாளைப் பார்த்து குழந்தைகளுக்கு எண்ணிக்கூற வாய்ப்பு கொடுத்தல்.

ஒன்றே - ஒன்றே - ஒன்று
அன்னாசிப் பழம் - ஒன்று
ஒன்றே, இரண்டே இரண்டு
மாம்பழமுண்டு இரண்டு
ஒன்றே, இரண்டே மூன்று
வாழைப்பழங்கள் - மூன்று

## மதிப்பீடு

- எண்ணிக்கூற இயல்கிறது. (3 வரை)
- பொருத்தமான வண்ணம் கொடுக்கப்பட்டுள்ளது.
- கூடுதல் எண்ணிக்கையுள்ள கூட்டத்தைப் புரிந்து கொண்டுள்ளனர்.

## பயிற்சித்தாள் - 5.3"படத்தில் என்னென்ன?" வண்ணம் தீட்டுங்கள்

**வளர்ச்சி மண்டலங்கள்** :
- அறிவுசார் வளர்ச்சி
- மொழிவளர்ச்சி

**திறன்கள்** :

1. ஐம்புலன்களைப் பயன்படுத்தி பொருட்கள், உயிரினங்கள் ஆகியவற்றை உற்றுநோக்கி சிறப்புகளைக் கண்டறியவும் வாய்மொழியாக வெளியிடவும் இயல்கிறது. பொருத்தமான வண்ணம் தீட்ட இயல்கிறது. (30)

2. படங்கள் கதைகளை உற்றுநோக்கி விளக்கங்கள் கண்டறிந்து வெளியிடுதல். (21)

**கருத்து** : வீட்டைச் சுற்றி பல்வேறு செடிகள் நட்டு வளர்க்கப்படுகிறது.

**கருவிகள்** : பயிற்சித்தாள், கிரையான்ஸ், பலவகை இலைகள்

**சூழல்** : சுற்றுப்புறத்தைப் பார்வையிட்டு, சுற்றுப்புறத்திலுள்ள தாவரங்களை உற்று நோக்கி வந்தபின்பு பயிற்சித்தாளைப் பயன்படுத்தலாம்.

**செயல் முறை**

- **கதைக்கூற்று** : சித்திராவின் வீட்டில் ஒரு பெரிய பலாமரமும் ஒரு பெரிய மாமரமும் இருந்தது. சித்திரா தினமும் மாவினுடையவும், பலாவினுடையவும் அருகே செல்வாள். சிறிது நேரம் பலா மரத்திடம் பேசுவாள். சித்திரா பலாமரத்திடம் என்ன பேசியிருப்பாள்?

(பிரதிபலிப்புகள்)

“பலாமரமே! நீ என்று பழம் தருவாய்?”

“நேரம் வரட்டும்.......”

“நான் உன்னோடு சேரமாட்டேன். தினமும் இதைத்தான் கூறுகிறாய்”. சித்திரா மாமரத்தின் அருகில் போனாள்.

“மாமரமே எனக்கு என்று மாம்பழம் தருவாய்?” “நேரம் வரட்டும்”. “நான் உன்னோடு சேரமாட்டேன்”. அவள் வீட்டிற்கு வந்தாள். சில நாட்களுக்குப் பின் பூங்குயில் வந்து சன்னலில் அமர்ந்தது. சித்திராவை அழைத்தது. மாமரம் பூத்தது. மாங்காய் பழுத்தது. விஷுப்பறவை வந்தது. சன்னலில் அமர்ந்தது. சித்திராவை அழைத்தது. பலாமரம் பூத்தது பலாக்காய் பழுத்தது. “வா போகலாம். வா போகலாம்.” சித்திராவும் கிளிகளும் மாமரத்தின் அடியில் சென்றனர். அங்கு ஏராளம் ஆட்கள். கிளிகள் கூறின. நாங்கள் பழத்தைக் கொத்தி கீழே இட்டுத் தருகிறோம். அனைவருக்கும் மகிழ்ச்சியாக இருந்தது.

- பயிற்சித்தாள் 5.3 “படத்தில் என்னென்ன? வண்ணம் தீட்டுங்கள்” வழங்குதல்.
  - படத்தில் என்னென்ன?
  - என்னென்ன தாவரங்கள் உள்ளன?
  - எவ்வாறு தெரிந்து கொண்டீர்கள்? (பழங்களைப் பார்த்து)
  - உங்களது வீட்டைச் சுற்றி என்னென்ன தாவரங்கள் உள்ளன?
  - ஆசிரியை சில இலைகளைக் காட்டுதல். எந்த தாவரத்தினுடையது என குழந்தைகள் கூறுதல்.
  - படத்திற்கு வண்ணம் தீட்டுதல் (படைப்பாற்றல்)
  - குழந்தைகள் நிறைவு செய்த பயிற்சித் தாள்களைக் காட்சிப்படுத்துதல்.

## மதிப்பீடு

- படத்திலுள்ள தாவரங்களைத் தெரிந்து கொள்ளமுடிந்தது.
- தாவரத்தின் சிறப்புகளைச் சொல்ல முடிந்தது.
- பொருத்தமான வண்ணம் கொடுக்கப்பட்டுள்ளது.
- இலைகளைத் தெரிந்துகொண்டு தாவரத்தின் பெயர் சொல்கிறார்கள்.

## மையக் கருத்து: 6 - உணவு

ஒப்பீடு செய்தலும் வகைபடுத்தலும் செயல்திறன்களாகும். முக்கிய சிறப்புகளின் அடிப்படையில் தான் இது நடத்த வேண்டும். ஒரேபோன்ற காரியங்களையும் வேறுபாடு உள்ளவையையும் கலந்துரையாடிய பின்பு பயிற்சித்தாள்களைத் தானாகவே முழுமைப்படுத்தட்டும்.

### செயல்பாட்டு வரிசை

1. விருப்பமான உணவு விளக்கங்கள்.

↓

2. பலவகை உணவு அனுபவ விளக்கம். (பிஸ்கட், பாயசம், சோறு, கறிகள்......)

↓

3. பயிற்சித்தாள் 6.1 (அப்பு என்னென்ன சாப்பிடுவான்?) வழங்குதல்.

↓

4. உயிரினங்களின் உணவு.

↓

5. தாவரங்கள் பழங்கள் பாடல்கள், கதைகள்.

↓

6. பயிற்சித்தாள் 6.2 “வரைவோம் இணைப்போம்” வழங்குதல்.

↓

7. பழங்கள், இலைகள் வகைப்படுத்துதல். (வண்ணம், வடிவம், அளவு, சுவை......)

↓

8. Role play, போலச் செய்தல்.

↓

9. உணவு விளையாட்டுகள். (மணம், வடிவம், நிறம், சுவை)

↓

10. பயிற்சித்தாள் 6.3 “யாருக்கு என்ன உணவு?” வழங்குதல்.

↓

11. தாவரப் பராமரிப்பு.

↓

12. மாதிரியைப் பார்த்து அடுக்கு உருவாக்குதல்.

↓

13. இயற்கையை ரசித்தல்.

↓

14. சமையலறைக் கருவிகள். (kitchen set)

↓

15. உணவுப் பழக்கங்கள்.

↓

16. பயிற்சித்தாள் 6.4 “நல்ல உணவுப் பழக்க வழக்கங்களைக் கண்டறிவோம்” வழங்குதல்.

↓

17. உணவுடன் தொடர்புடைய பல்வேறு பாடல்கள்.

### பயிற்சித்தாள் - 6.1 அப்பு என்னென்ன சாப்பிடுவான்?

**வளர்ச்சி மண்டலம்:** அறிவுசார் வளர்ச்சி

**திறன்** : ஐம்புலன்களைப் பயன்படுத்தி பொருட்கள் / உயிரினங்கள் ஆகியவற்றை உற்று நோக்கி சிறப்புகளைக் கண்டறியவும் வாய்மொழியாக வெளியிடவும் இயல்கிறது. (30)

**கருத்து** : பலவகை உணவுகள் உள்ளன.

**கருவிகள்** : பயிற்சித்தாள், கிரையான்ஸ்

**சூழல்** : பொம்மை பக்கம் (203)- ல் உள்ள உணவுப் பாடல்கள் இரண்டோ மூன்றோ பாடிய பின்பு பல்வேறான உணவுப் பொருட்களை அறிமுகப் படுத்துதல்.

### செயல்முறை

- **கதைக்கூற்று** : அப்பு அனைவருடையவும் செல்லக் குழந்தை. அப்புவின் விருப்பமான உணவு தோசையாகும். இட்டிலியையும் அப்பு சாப்பிடுவான். பழங்களும் சாப்பிடுவான். தோசை சுடுவதை அப்பு பார்த்திருக்கிறான். அதைப் பார்க்க அப்புவிற்கு எவ்வளவு விருப்பம்? தோசை சுடுவது பார்க்கும் போது அப்பு தோசைப் பாட்டு பாடுவான்.

  "மாவு ஊற்றியதும் ஸ்......ஸ்.....ஸ்
  வட்டமாக்கியதும் ஸ்.......ஸ்.......ஸ்
  பொரிந்த கல்லில் ஸ்.....ஸ்......ஸ்
  திரித்தும் மறித்தும் ஸ்.........ஸ்........ஸ்
  என்ன மணம் ஸ்...........ஸ்...........ஸ்
  சட்டினி சேர்த்து ஸ்......ஸ்........ஸ்

  இன்று அப்புவின் உணவு என்னென்னவெனப் பார்ப்போம்.
- பயிற்சித்தாள் - 6.1 "அப்பு என்னென்ன சாப்பிடுவான்?" வழங்குதல். அப்புவின் உணவிற்கு அருகிலுள்ள வட்டத்திற்கு வண்ணம் தீட்டுதல். குழந்தைகள் வண்ணம் தீட்டுதல்.

## மதிப்பீடு

- உணவுப் பொருட்களைப் புரிந்து கொண்டு அருகில் உள்ள வட்டத்தில் வண்ணம் தீட்ட இயல்கிறது.

## பயிற்சித்தாள் - 6.2 ''வரைவோம் இணைப்போம்"

**வளர்ச்சி மண்டலம்** : அறிவுசார் வளர்ச்சி

**திறன்**: கண்டறிதல் செயல்பாடுகளில் ஈடுபடவும் அனுபவத்தின் துணையோடு முடிவுகளை வெளியிடவும் இயல்கிறது. (31)

**கருத்து** : மனிதர்கள் மட்டுமல்ல பிற உயிர்களும் பசிக்கும் போது உணவு உண்கிறது.

**கருவிகள்** : பயிற்சித்தாள்

**சூழல்** : வீட்டில் வளர்க்கும் உயிரினங்களுக்கு கொடுக்கின்ற உணவு நாம் உண்ணும் உணவு ஆகியவற்றுடன் தொடர்புடைய அனுபவங்களைக் கூறுதல். குட்டி ஆடும் கோழி அம்மாவும் அப்புவின் நண்பர்கள். அவன் அவற்றிற்கு உணவு கொடுப்பான்.

**விளையாட்டு** : வீட்டில் வளர்க்கும் உயிரினங்கள் எவை? அவை உண்ணும் உணவுகள் எவை? உணவின் பெயரைச் சொல்லி விளையாடுதல். உணவின் பெயரைச் சொல்லும் போது அதை உண்ணும் உயிரினத்தின் பெயரைக் கூறவேண்டும். ஒரு நாள் அவன் ஆட்டுக்குட்டிக்கு ஒரு மாம்பழம் கொடுத்தான். "பிறகு சாப்பிடலாம்".

என்று ஆட்டுக்குட்டி கூறியது. அப்பு மாம்பழத்தை அங்கேயே வைத்தான். அவர்கள் மூவரும் விளையாடப் போயினர். திரும்பிவந்து பார்த்தபோது மாம்பழத்தைக் காணவில்லை. எங்கே போனது? அனைவரும் சுற்றிலும் பார்த்தனர். “சில் சில்” மரக்கிளையில் ஒருவர். “ஆஹா, நீதானா மாம்பழம் சாப்பிட்டது?” கோழி கோபப்பட்டது. அப்பு கூறினான். “அணில் குட்டியே இனி என்ன செய்வாய்? நான் ஆட்டிற்கு அன்புடன் கொடுத்ததல்லவா? அணில் கூறியது பரவாயில்லை. நான் அன்போடு அதைத் தின்றேன். “இப்போது ஒரு தந்திரத்தைக் காட்டுகிறேன். அணில் மரக்கிளையை குலுக்கியது. படபட என மாம்பழங்கள் விழுந்தன. நல்ல சுவையான மாம்பழங்கள். அனைவரும் மகிழ்ச்சியடைந்தனர். ஆடு கூறியது எனக்கு இலைதான் பிடிக்கும். கோழி கூறியது எனக்கு அரிசிதான் பிடிக்கும். அவர்கள் விரும்பிய உணவை அவர்களுக்குக் கொடுக்கலாமா?

- பயிற்சித்தாள் - 6.2 “வரைவோம் இணைப்போம்” வழங்குதல்
- **படவாசிப்பு**
  - படத்தில் யார் யார் உள்ளனர்? என்னென்ன உணவுப் பொருட்கள் உள்ளன?
  - ஒவ்வொருவரையும் அவரவர்களுக்கு விருப்பமான உணவுக்கு நேராக வரைத்து இணையுங்கள்.

### மதிப்பீடு

- உயிரினங்களையும் அவற்றின் உணவையும் புரிந்து கொண்டு வரைந்து இணைக்க முடிகிறது.

### பயிற்சித்தாள் - 6.3 யாருக்கு என்ன உணவு?

**வளர்ச்சி மண்டலம்** : அறிவுசார் வளர்ச்சி

**திறன்** : கணிதப் பிரச்சனைகளுக்குத் தீர்வுகாண இயல்கிறது (46)

**கருத்து** : பலவகை உணவுகள் உள்ளன.

**கருவிகள்** : பயிற்சித்தாள்

**சூழல்** : பல்வேறு உணவுப் பொருட்களைக்குறித்து கலந்துரையாடிய பின்.

### செயல்முறை

- **கதைக்கூற்று** : முயல் வாழை நட்டது. வாழைக்கு அருகில் காரட்டும் நட்டது. பச்சைக்கிளி மாமரக்கன்று நட்டது. சோம்பேறி அணில் ஒன்றும் செய்ய வில்லை. வாழை வளர்ந்து குலைத்தது. குலை பழுத்தது. மாமரம் வளர்ந்தது காய்த்தது. மாங்காய்கள் பழுத்தன. காரட் வளர்ந்தது. விளைந்தது. வா முயலே மாம்பழம் கொத்தியிட்டுத் தருகிறேன்.’’ ‘‘பச்சைக்கிளி கூறியது. வாகிளியே அன்பான கிளியே வாழைப்பழம் தருகிறேன். “காரட்டும் தருகிறேன்” முயல் கூறியது. அணில் கேட்டது ‘எனக்கும் தருவீர்களா?” இல்லை. தரமாட்டோம். கிளிகளும்

முயல்களும் ஒன்றாகக் கூறின. அணில் கூறியது ''பாடல் பாடும் பச்சைக்கிளியே நீ பாடும்போது நான் தாளம் போடுகிறேன்". "குதித்துச் செல்லும் முயல்களே நீங்கள் துள்ளி விளையாடும் போது நான் தாளம் போடுகிறேன்". ரசிக்கும் படியாக இருக்கும். "பச்சைக்கிளியும் முயலும் ஒத்துக் கொண்டன. பாடலுக்கிணங்க முயல்கள் குதித்தன. அணில் தாளம் போட்டது. விளையாட்டு முடிந்தபோது பச்சைக்கிளியும் முயலும் கூறின "குட்டி அணிலே உனக்குத் தேவையான உணவை எடுத்துக்கொள்'' "அணில் இரண்டு விதமான உணவை எடுத்தது. அவை எடுத்த உணவை வரைந்து இணைக்கலாமா?

- ஒவ்வொரு உயிரினத்திற்கும் ஒவ்வொன்று வீதம் கிடைக்க வேண்டுமெனில் எந்த பழம்/ காய்கறி கொடுக்கலாம்?
- அவற்றை இணைத்து வரையுங்கள்
- முயலின் உணவு எது? வரைந்து இணையுங்கள்.

## மதிப்பீடு

- படத்தில் உள்ள உயிரினங்களையும் உணவுப் பொருட்களையும் புரிந்து கொண்டு பெயர் கூற இயல்கிறது.
- உயிரினங்களையும் உணவையும் இணைத்து வரைய இயல்கிறது.

## பயற்சித்தாள் – 6.4 "நல்ல உணவுப் பழக்கவழக்கங்களைக் கண்டறிவோம்"

**வளர்ச்சி மண்டலம்** : அறிவுசார் வளர்ச்சி

**திறன் :** உணவுப் பழக்கங்கள் சுகாதாரப் பழக்கங்கள் ஆகியவை குறித்து அறிகிறார்கள். (36)

**கருத்து** : சுத்தமான உணவை உண்ண வேண்டும்.

**கருவிகள்** : பயிற்சித்தாள், கிரையான்ஸ்

**சூழல்** : உணவு/ஆரோக்கிய பழக்கங்களைக் குறித்து கலந்துரையாடுதல்.

### செயல்முறை

- **கதைக்கூற்று** : இன்று விடுமுறை நாள். அப்பு அக்காவை அழைத்தான். 'நாம் விளையாடப் போகலாமா' அக்காவும் அப்புவும் நண்பர்களை அழைத்தனர். அப்புவும், அக்காவும் நண்பர்களும் சேர்ந்து தோட்டத்தில் விளையாடச் சென்றனர். அவர்கள் விளையாடத் தொடங்கினர். ''நான் ஒரு விளையாட்டு சொல்கிறேன். அந்த விளையாட்டை விளையாடலாமா? அக்கா கேட்டாள். அனைவரும் ஒத்துக் கொண்டனர் அவர்கள் என்ன விளையாட்டு விளையாடியிருப்பார்கள்? (சுதந்திர பிரதிபலிப்பு) அப்புவும் நண்பர்களும் வட்டத்தில் நின்றனர். நாமும் அந்த விளயாட்டை விளையாடலாமா? குழந்தைகள் வட்டத்தில் நிற்கின்றனர். ஆசிரியை அக்காவாக நிற்கிறார்.

**ஆசிரியை** : நான் பாடுவதற்கு பதில் பாட்டாக நீங்கள் சைகைப் பாடலாகப் பாட வேண்டும். "காலில்

தொட்டு கை கொட்டு"

**குழந்தைகள்** : "காலில் தொட்டு கை கொட்டு" குழந்தைகள் ஏற்றுப்பாடி, காலில் தொட்டு கை கொட்டுதல்.

**ஆசிரியை** : "கால் முட்டியில் தொட்டு கை கொட்டு" ஆசிரியர் கால் முட்டியில் தொட்டு கை கொட்டுகிறார். (கால் முட்டியில் தொட்டு கைகொட்டு)

**குழந்தைகள்** : பாடலைப் பாடி கால் முட்டியில் தொட்டு கை கொட்டுகிறார்கள். தொடர்ந்து வயிறு, மார்பு, உதடு, மூக்கு, காது, கண், தலை ஆகியவற்றைச் சேர்த்துப் பாடுதல்.

"சேர்ந்து குதித்து கை கொட்டு" குழந்தைகள் சேர்ந்து குதித்து கை கொட்டுகிறார்கள்.

"திரும்பித்திரும்பி கை கொட்டு" குழந்தைகள் திரும்பித்திரும்பி கை கொட்டுகிறார்கள்.

அப்புவும் நண்பர்களும் விளையாடிய விளையாட்டு உங்களுக்குப் பிடித்திருக்கா? அடுத்த விளையாட்டைத் தொடங்கும் முன் மாமா வந்தார். அக்கா கையில் பிஸ்கட் பாக்கட்டைக் கொடுத்தார். அக்கா பாக்கட்டைத் திறந்தாள். அப்பு ஓடிச் சென்று அதைத்தட்டிப் பறிக்க முயன்றான். நண்பர்களும் அப்புவுடன் சேர்ந்தனர்.

பிஸ்கட் அனைத்தும் நொறுங்கித் தரையில் விழுந்தன. அப்புவும் நண்பர்களும் அதை எடுத்துச் சாப்பிட முயன்றனர்.

"தரையில் விழுந்ததைச் சாப்பிடக் கூடாது. நோய் வரும் என்று அக்கா கூறினாள். அப்பு கேட்கவில்லை அவன் தரையில் கிடந்த பிஸ்கட் துண்டுகளை எடுத்துச் சாப்பிட்டான். விளையாட்டை நிறுத்தி விட்டு அனைவரும் திரும்பப் போயினர்.

மறுநாள் காலையில் எழும்பிய அப்புவிற்கு கடுமையான வயிற்று வலி. அப்பு கழிவறைக்குச் சென்றான். ஒரு முறை போனான். இரண்டு முறைபோனான், மூன்று முறை போனான். மீண்டும் மீண்டும் போனான். அவன் அழத் தொடங்கினான். வயிற்றுப் போக்கு, வயிற்றுப் போக்கு, அம்மா அப்புவையும் அழைத்துக் கொண்டு மருத்துவமனைக்குச் சென்றார். மருத்துவர் காரியங்களைக் கேட்டறிந்தார், அப்பு உண்மையைக் கூறினான். மருத்துவர் அப்புவுக்கு ஒரு காகிதம் கொடுத்தார். அக்காகிகத்தில் செய்யக்கூடியதும் செய்யக் கூடாததுமான காரியங்கள் உள்ளன.

கண்டு பிடியுங்கள்.

- பயிற்சித்தாள் – 6.4 ''நல்ல உணவுப் பழக்கவழக்கங்களைக் கண்டறிவோம்" வழங்குதல்.
- **படவாசிப்பு**
  - படத்தை உற்றுநோக்கி ஒவ்வொருவரும் செய்யும் காரியங்களை விளக்க வாய்ப்பு கொடுத்தல்.
  - ஆரோக்கியத்திற்குரிய நல்ல பழக்கங்கள் எவையெல்லாம்?
  - படங்களில் உள்ள சரியான பழக்கங்கள் எவை?

தொட்டு காண்பிக்கட்டும்.

- நல்ல உணவுப் பழக்கங்கள் உள்ள படங்களுக்கு நேராக அடையாளப்படுத்தலாம்.
- நல்ல ஆரோக்கியப் பழக்கங்களைக் குறித்து மேலும் கலந்துரையாடுதல்.
- உணவை மென்று சாப்பிடுதல் .
- பேக்கரி உணவுப் பொருட்களின் அளவுக்கதிகமான பயன்பாடு.
- பாக்கட் உணவுகளின் பயன்பாடு.
- நிறம் கலர்ந்த குளிர்பானங்கள் பயன்படுத்தாதிருத்தல்.

## மதிப்பீடு

- சரியான உணவுப் பழக்கங்களையும் தவறானவற்றையும் புரிந்து கொண்டுள்ளனர்.
- சரியான முறையில் படங்களுக்கு நேராக (✓) அடையாளம் கொடுக்கப்பட்டுள்ளது.

## மையக் கருத்து: 7-விழாக்கள், சுதந்திர தினம்

சுதந்திரம் என்பது சிறிய குழந்தைகளைப் பொறுத்தமட்டில் பார்க்க முடியாத கருத்தாகும். இந்தியா, இந்திய சுதந்திரம் என்பதையெல்லாம் அவர்களால் உட்கொள்ள முடியும் எனறு கூற முடியாது. எனவே கதைகள், உருவாக்கல், பாடல் போன்ற சுவையான நிகழ்ச்சிகளை ஒழுங்கு செய்வது மட்டுமே இந்த வயதினருக்குத் தேவையானது. பயிற்சித்தாள் கொடுக்கும் போது இந்த காரியத்தை கவனத்தில் கொள்ள வேண்டும்.

கொடியை உருவாக்கும் போது சுய செயல்முறை வாய்ப்புகளை முடிந்தவரை பயன்படுத்த வேண்டும். பசையைத் தேய்ப்பதிலும் ஒட்டுவதிலும் சுதந்திரம் கொடுக்க வேண்டும். திறன் வளர்ச்சிக்கான வாய்ப்பாக கருதவேண்டும். செய்து கொடுப்பது என்பதற்கு மேலாக செய்ய உதவி செய்து முழுமைப்படுத்துதல் என்ற அணுகுமுறையை மேற்கொள்ள வேண்டும்.

### செயல்பாட்டுவரிசை

1. விழாக்களுடன் தொடர்புடைய பாடல்கள் கதைகள் கேட்டல்.
   ↓
2. திருமணம், பிறந்தநாள் போன்ற விழாக்கள் தொடர்பாக வீடும் சுற்றுப்புறமும் அலங்காரம் செய்தல் காணொளிக்காட்சி காணுதல்.
   ↓
3. வகுப்பறை அலங்கரித்தல்.
   ↓
4. பயிற்சித்தாள் 7.1 “பாட்ஜ் தயாரிக்கலாம்” வழங்குதல்.
   ↓
5. பயிற்சித்தாள் 7.2 “கொடி தயாரிப்போம் வழங்குதல்.
   ↓
6. சுதந்திரதினக் கொண்டாட்டத்தில் பங்குபெறுதல்.

**வளர்ச்சி மண்டலம்** : உடல் இயக்க வளர்ச்சி

**திறன்** : படத்தில் கிரையான் பயன்படுத்தி வண்ணம் தீட்ட இயல்கிறது (4)

**கருத்து** : விழாக்கள் தொடர்பாக வீடும் சுற்றுப்புறமும் பள்ளியும் அலங்கரித்தல்.

**கருவிகள்** : கிரையான்ஸ்

**சூழல்** : சுதந்திரதின கொண்டாட்டத்தின் முத்தைய நாள் செய்ய வேண்டிய செயல்கள்.

### செயல் முறை

- பயிற்சித்தாள் 7.1 “பாட்ஜ் தயாரிக்கலாம்?” வழங்குதல்.
  - ஆசிரியையின் நிபந்தனைகளுக்கு ஏற்ப குழந்தைகள் பாட்ஜிற்கு வண்ணம் தீட்டுதல்.
  - ரிப்பனுக்கு தேசியக் கொடியின் வண்ணங்களைத் தீட்டுதல்.
  - ஆசிரியை பாட்ஜில் குழந்தைகளின் பெயரை எழுதிக் கொடுக்க வேண்டும்.
  - ஆசிரியை பாட்ஜை வெட்டிக் கொடுக்க வேண்டும்.

### மதிப்பீடு

- நிபந்தனைகளுக்கேற்ப சரியான முறையில் வண்ணம் தீட்டுகிறார்கள்.

## பயிற்சித்தாள் - 7.2 கொடி தயாரிப்போம்

**வளர்ச்சி மண்டலம்** : உடல் இயக்க வளர்ச்சி

**திறன்** : படத்தில் கிரையான் பயன்படுத்தி வண்ணம் தீட்ட இயல்கிறது. (4)

**கருத்து** : விழாக்கள் தொடர்பாக வீடும் சுற்றப்புறமும் பள்ளியும் அலங்கரித்தல்.

**கருவிகள்** : ஈர்க்கில், பசை, கிரையான்ஸ்

**சூழல்** : சுதந்திர தினத்தின் முந்தைய நாள் கொடி உரு வாக்குதல்.

### செயல்முறை

- பயிற்சித்தாள் 7.2 “கொடி தயாரிப்போம்” வழங்குதல்.
  - மேலே உள்ள கொடியின் படத்தை உற்று நோக்குதல்.
  - என்னென்ன வண்ணங்கள்? குழந்தைகள் கூறுதல்.
  - கீழே உள்ள கொடிக்கு வண்ணம் தீட்டுதல்.
  - ஆசிரியை கொடியை வெட்டியெடுத்து கம்பில் ஒட்டுதல். (பெற்றோரின் உதவியை நாடலாம்)

## மதிப்பீடு

- நிபந்தனைகளுக்கேற்ப சரியாக வண்ணம் தீட்டுதல்.

## மையக் கருத்து: 8 - உடல் நலம், நோய்கள், மருத்துவமனை

பயிற்சித்தாள், பல்வேறு செயல்பாடு உறைவிடங்களைப் பயன்படுத்துவதற்குத் தடையாக இருக்கக் கூடாது, ஊமை நாடகம், போலச் செய்தல், பொம்மலாட்டம், மணல் தடம் பயன்படுத்தியுள்ள கதை வெளியீடு ஆகியவற்றை. எவ்வாறு அழகாக பயிற்சித்தாள்களுடன் ஒருங்கிணைக்கலாம் என ஆலோசிக்க வேண்டும்.

### செயல்பாட்டுவரிசை

1. ஆரோக்கிய, சுகாதாரப்பாடல்கள் பாடுதல்.

↓

2. உடல் சுத்தத்துடன் தொடர்புடைய செயல்பாடுகளில் ஈடுபடுதல்.

↓

3. பயிற்சித்தாள் 8.1 “படம் பார்த்துக் கூறுவோம்” வழங்குதல்.

↓

4. மருத்துவர் செட்டைப் பயன்படுத்தி போலச் செய்தல்.

↓

5. பயிற்சித்தாள் 8.2 “உங்களுக்கு யாரைப் பிடிக்கும்'? வழங்குதல்.

↓

6. கையில் அழுக்கு உள்ளதா? எளிய சோதனை.

↓

7. பயிற்சித்தாள் 8.3 “யார் சரி” வழங்குதல்.

### பயிற்சித்தாள் - 8.1 “படம் பார்த்துக் கூறுவோம்”

**வளர்ச்சி மண்டலம்** : அறிவுசார் வளர்ச்சி
மொழி வளர்ச்சி

**திறன்கள்** :
1. ஆரோக்கியப் பழக்கங்கள், சுகாதாரப் பழக்கங்களைப் பற்றி அறிதல் (36)
2. வேறொன்றுடன் ஒப்பீடு செய்து பொம்மலாட்டம், ரோல் ப்ளே, போலச் செய்தல் போன்ற சூழல்களில் நடிக்க இயல்கிறது. (25)

**கருத்துகள்** : நோய் வந்தால் சிகிட்சை செய்யும் நிறுவனம் தான் மருத்துவமனை.
மருத்துவமனையில் மருத்துவர், செவிலியர் ஆகியோர் உள்ளனர்.

**கருவிகள்** : கிரையான். மருத்துவர் செட்

**சூழல்** : நோய்கள் வந்த அனுபவங்கள் விவரித்தல்.

**செயல்முறை**

- பயிற்சித்தாள் 8.1 'படம் பார்த்துக் கூறுவோம்' வழங்குதல்,
- **பட வாசிப்பு**
  - படத்தில் யார் யார் உள்ளனர்?
  - நோய்கள் வந்தால் நாம் எங்கு செல்கிறோம்?
  - குழந்தைகள் மருத்துவமனைக்குச் சென்ற அனுபவங்கள் கூறட்டும்.
  - மருத்துவமனையில் என்னென்ன நடக்கிறது?
  - மருத்துவமனை விளையாட்டு விளையாடுதல்..
  - மருத்துவர் செட் பயன்படுத்தி மருத்துவர், செவிலியர், நோயாளிகள் போன்று நடித்தல்.
  - படத்தில் உள்ள ஒவ்வொருவரையும் பிரித்தறிகிறார்கள்.

- மருத்துவருக்கும் செவிலியருக்கும் மட்டும் வண்ணம் தீட்டுகிறார்கள்.

## மதிப்பீடு

- மருத்துவர், செவிலியர் ஆகியோரைப் புரிந்து வண்ணம் தீட்டப்பட்டுள்ளது.
- பிறருக்கு புரியும் விதம் மருத்துவர் செவிலியர், நோயாளி இவர்களை நடிப்பின் மூலம் வெளிப்படுத்தியுள்ளனர்.
- என்னென்ன வேறுபாடுகள் உள்ளன எனக் கூற இயல்கிறது.
- வண்ணம் தீட்டுதல் நுட்பம்.

## பயிற்சித்தாள் - 8.2 " உங்களுக்கு யாரைப் பிடிக்கும்?"

**வளர்ச்சி மண்டலம்** : அறிவுசார் வளர்ச்சி

**திறன்கள்** :

1. ஆரோக்கிய பழக்கங்கள் சுகாதாரப் பழங்கங்கள் ஆகியன குறித்து அறிதல். (36)
2. அனுபவத்தின் பின்துணையோடு கண்டறிந்தவற்றை வெளியிட இயல்கிறது. (31)

**கருத்து** : ஆரோக்கியத்திற்கு சுகாதாரப் பழக்கவழக்கங்கள் முக்கியமானதாகும்.

**கருவிகள்** : கிரையான்ஸ்

**சூழல்** : சரியானதும் தவறானதும் ஆன ஆரோக்கிய பழக்கவழக்கங்களைக் குறித்து கலைந்துரையாடல்.

### செயல்முறை

- **கதைக்கூற்று** : ஷிபி நகம் வளர்த்த முடிவு செய்தாள். நகத்தை நீளமாக வளர்த்தினாள். நீளமான நகத்திற்கு மேல் நகவண்ணப்பூச்சு போட்டாள். "என்ன அழகு அம்மா" "செல்லம், அம்மா நகம் வெட்டித் தரட்டுமா?" அவள் ஒத்துக் கொள்ளவில்லை. நகம் மேலும் வளர்ந்தது. ஐந்து விரல்களிலும் வளர்ந்தது. நகத்திற்கு அடியில் கறுப்பு நிறம். ஈக்கள் அவள் விரலைச் சுற்றிலும் பறந்தன. அவளுக்கு இப்போது எதையுமே சரியாக எடுக்க முடியவில்லை. அவள் ஒருநாள் தண்ணீரில் கையை அமிழ்த்தினாள். தண்ணீரின் நிறம் மாறியது. கறுப்பு நிறம். "அம்மா, அம்மா நான் கையை அமிழ்த்தியதும் தண்ணீரின் நிறம் கறுப்பானது. அம்மா வந்தார்கள். அது உன்னுடைய நகத்தில் உள்ள அழுக்கு. நான் அன்றே கூறினேன் அல்லவா?" அவளுக்கு வெட்கம் வந்தது. நகத்தை வெட்டினாள். ஈக்கள் வராமல் போனது. அவள் அம்மாவிடம் கூறினாள். "எவ்வளவு அழகு இல்லையாம்மா?" அம்மா சிரித்தாள். இதைப் போன்று பல் தேய்க்க சோம்பேறியான குழந்தையின் கதையையும் ஆசிரியை கூறுதல்.
- பயிற்சித்தாள் 8.2 உங்களுக்கு யாரைப் பிடிக்கும்? வழங்குதல்

## மதிப்பீடு

நல்ல பழக்கங்களைக் கண்டறிய இயல்கிறது.
பொருத்தமான வண்ணம் தீட்டப்பட்டுள்ளது.

## பயிற்சித்தாள் – 8.3 யார் சரி?

**வளர்ச்சி மண்டலம்** : அறிவுசார் வளர்ச்சி

**திறன்கள்** :
1. ஆரோக்கிய பழக்கவழக்கங்கள் சுகாதாரப் பழக்கங்கள் ஆகியன குறித்து அறிதல். (36)
2. கண்டறிதல் செயல்பாடுகளில் ஈடுபடவும் அனுபவத்தின் பின்துணையோடு முடிவுகள் வெளியிடவும் இயல்கிறது. (31)

**கருத்து** : ஆரோக்கியத்திற்கு சுகாதாரப் பழக்கவழக்கங்கள் மிகவும் முக்கியமானது.

**கருவிகள்** : கிரையான்ஸ்

**சூழல்** : ஆரோக்கிய பழக்கவழக்கங்கள் தொடர்புடைய கலந்துரையாடல்.

### செயல்முறை

- **விளையாட்டு** : சே, சே. சே....... விளையாட்டு.

ஆசிரியை ஒவ்வொரு காரியத்தையும் கூறுவார்கள். சரியல்லாத காரியம் கேட்டால் சே, சே, எனக் கூறவேண்டும். (காரியங்கள் வேகமாகக் கூற வேண்டும்) தவறாக சே, சே, கூறக்கூடாது.

- காலையிலேயே குளித்தேன்.
- பல் தேய்க்காமல் தோசை சாப்பிட்டேன். (சே... சே)
- தோசை சாப்பிட்ட பின்பு பல் தேய்த்தேன். (சே, சே)
- கைகளை சோப்பு போட்டு கழுவினேன்
- தரையில் விழுந்த உணவைத் துடைத்து தின்றேன். (சே, சே)
- பாத்திரம் கழுவினேன்.
- கழுவாத பாத்திரத்தில் சோறு விளம்பினேன். (சே, சே)
- நகம் வெட்டினேன்.
- குளிக்காமல் பள்ளிக்குப் போனேன். (சே, சே)

**கலந்துரையாடல்** : தொடர்ந்து ஊமைநடிப்பு (மைமிங்). காலையில் எழும்பிய நேரம் முதல் பள்ளிக்குப் போவது வரையிலான முக்கியமான நிகழ்ச்சிகள்.

- பயிற்சித்தாள் – 8.3 'யார் சரி' வழங்குதல்
  - படத்தில் காணும் செயல்களைக் குறித்துப் பேசுதல்.
- **படவாசிப்பு**
  - மேலே உள்ள படத்திற்கும் கீழே உள்ள படத்திற்கும் இடையே ஏதேனும் வேறுபாடு உள்ளதா?
  - வேறுபாடு என்ன?
  - எந்த படத்திலுள்ள குழந்தை சரியான ஆரோக்கிய பழக்கவழக்கங்களைக் கடை பிடிக்கிறது?
  - அந்த படத்தைக் கண்டறிந்து வலது பக்க கட்டத்தில் விருப்பமான வண்ணம் தீட்டுதல்.

## மதிப்பீடு

சரியான ஆரோக்கிய பழக்கவழக்கத்தைக் கடைபிடிக்கின்ற படத்தைப் புரிந்து கொண்டு அடையாளப் படுத்தப்பட்டுள்ளது.

# மையக் கருத்து: 9 - பூக்கள், பூந்தோட்டம், வண்ணத்துப் பூச்சிகள்

பாடல், செய்கைப்பாடல் ஆகியவற்றுடன் சேர்த்துதான் இங்கு பயிற்சித்தாள் வெளியிடப்படுவது. ரசித்துப் பாடிய பின்பு அந்த அனுபவத்தின் தொடர்ச்சியாக பயிற்சித்தாளை முழுமைப் படுத்த வேண்டும். பயிற்சித் தாளை மதிப்பிட்டு, திறன் வளர்ச்சியைக் குறித்துக் கொள்ளளும்படியாக அமைய வேண்டும். பல வளர்ச்சி மண்டலங்களில் உள்ள இதுவரை கருத்தில் கொண்ட அனைத்து பயிற்சித்தாள் வாய்ப்புகளையும் பிற செயல்பாடுகளையும் மனதில் கொண்டு படைப்புத் தொகுப்பு அமைக்க வேண்டும். படைப்புத் தொகுப்பில் உள்ள பயிற்சித்தாள்களின் மீது ஆசிரியைக்கு பயனுள்ள மதிப்பீட்டுக் குறிப்புகளை எழுதலாம்.

## செயல்பாட்டு வரிசை

1. பூக்களைக் குறித்த செய்கைப் பாடல்.

↓

2. கதைக்கூற்று பயிற்சித்தாள் 9.1 வண்ணம் தீட்டுவோம் அழகு படுத்துவோம் – வழங்குதல்.

↓

3. சுற்றுப்புற நடைப்பயிற்சி. (பூக்கள் வண்ணத்பூச்சிகள் உற்றுநோக்கல்)

↓

4. வண்ணத்துப்பூச்சிகளின் பட அட்டைகளைக் காட்சிப்படுத்துதல்.

↓

5. வண்ணத்துப்பூச்சியைக் குறித்த பாடல்.

↓

6. பயிற்சித்தாள் 9.2 வண்ணத்துப்பூச்சியை வரைவோம். (வழங்குதல்)

↓

7. கதைக்கூற்று. (வண்ணத்துப்பூச்சி பூக்களில் சென்று இருக்கும். மணம் உள்ளதும், இல்லாததும்)

↓

8. பாடல், பயிற்சித்தாள் 9.3 படம் முழுமைப் படுத்துவோம் வண்ணம் தீட்டுவோம்.

↓

9. பூக்கள், வண்ணத்துப்பூச்சிகள் ஆகியவற்றுடன் தொடர்புடைய பாடல்களை ஒலி ஒளி உதவியுடன் கேட்கச் செய்தல்.

↓

10. நடித்துப் பாடுதல்.

## பயிற்சித்தாள் – 9.1 “வண்ணம் தீட்டுவோம், அழகுபடுத்துவோம்.

**வளர்ச்சி மண்டலங்கள் :**
- அறிவுசார் வளர்ச்சி
- மொழி வளர்ச்சி
- படைப்பு மற்றும் அழகியல் மேம்பாடு

**திறன்கள் :**
1. படங்கள், பொருட்கள் இயற்கை ஆகிய வற்றைப் பார்த்து கருத்துகள் கூற இயல்கிறது. (14)
2. ஐம்புலன்களைப் பயன்படுத்தி பொருட்களை உற்றுநோக்கி சிறப்புகள் கண்டறியவும் வாய் மொழியாக வெளியிடவும் இயல்கிறது. (30)
3. பாவனையை உட்கொண்டு பாடல்கள் வெளியிட இயல்கிறது. (17) (குரல் ஏற்றத் தாழ்வு, செய்கை, தாளம் ராகம், அசைவு)

**கருத்துகள்** : • பூக்கள் பல நிறங்களில் உள்ளன.
• பூக்களை நோக்கி வண்ணத்துப்பூச்சிகள் வருகின்றன.

**கருவிகள்** : கிரையான்ஸ்

**சூழல்** : பூந்தோட்டப் பார்வையிடலுக்குப் பின்.

**செயல்முறை** : மணல் தட்டில் (Sand Tray) பூந்தோட்டம், அமைத்தல்.

- **கலந்துரையாடல்** : பூந்தோட்டத்தின் படம் காட்டுதல்.
- **பாடல்** : பூக்கள், வண்ணங்கள், வண்ணத்துப்பூச்சி இவற்றைக் குறித்து கலந்துரையாடல்.
  - பூக்களைக் குறித்த பாடலை ஆசிரியையும் (47)

    குழந்தைகளும் சேர்ந்து பாடுதல்.

    "பூக்கள் நாங்கள் பூக்கள்
    நாங்கள் ரோஜாப் பூக்கள்
    சிவந்த ரோஜாப் பூக்கள்
    பூக்கள் நாங்கள் பூக்கள்
    பூக்கள் நாங்கள் பூக்கள்
    நல்ல நல்ல பூக்கள்
    பலவிதமான பூக்கள்
    நறு மணமுடைய பூக்கள்"
- பயிற்சித்தாள் 9.1 "வண்ணம் தீட்டுவோம் அழகுபடுத்துவோம்." (வழங்குதல்)
  - படத்தில் உள்ள ஒருவரைக் குறித்து பாடல் பாடுவோம். யார் எனக் கூறலாமா?
  - பட்டாம்பூச்சி என்ற பாடல் பாடுதல். (பொம்மை பக்கம் 207)
- **படவாசிப்பு**
  - வண்ணத்துப்பூச்சிக்கு வண்ணம் தீட்டுதல்.
  - இனி யார் பூந்தோட்டத்தில் உள்ளது?
  - தட்டானுக்கு (தும்பி) வண்ணம் தீட்டுதல்.
  - வேறு யார் யார் இருக்கலாம்?
  - வண்ணம் தீட்டுதல்.
  - குழந்தைகள் பார்த்த பூந்தோட்டத்தைப் பற்றிக் கூறுதல்.

## மதிப்பீடு

- தாளத்துடன் பாட இயல்கிறது.
- பொருத்தமான வண்ணம் தீட்டப் பட்டுள்ளது.
- பூந்தோட்டத்தில் உள்ள உயிரினங்களைப் பிரித்தறிய இயல்கிறது.

## பயிற்சித்தாள் 9.2 வண்ணத்துப் பூச்சியை வரைவோம்

**வளர்ச்சி மண்டலங்கள்** : • மொழி வளர்ச்சி
• உடல் இயக்க வளர்ச்சி

**திறன்கள்** :
1. பொருட்களின் படங்களை உற்றுநோக்கி விளக்கங்களும் கண்டறிந்தவைகளை வெளியிடவும் இயல்கிறது (21)
2. முன் எழுத்து செயல்பாடுகளில் ஈடுபட முடிகிறது (13)

**கருத்து** : பூக்களை நோக்கி வண்ணத்துப்பூச்சிகள் வருகின்றன.

**கருவிகள்** : பாடல்கள், வண்ணத்துப் பூச்சியின் பட அட்டைகள்.

**சூழல்** : பூந்தோட்டம், வண்ணத்துப்பூச்சி இவற்றைப்

பார்க்கச் செல்தல். (களப்பயணம்)

- சிறகுகளின் எண்ணிக்கை, வண்ணம் இவை கூறுதல்.

**செயல்முறை** ஆசிரியை பலவகை வண்ணத்துப் பூச்சிகளின் பட அட்டைகளைக் காட்சிப் படுத்துதல்.

**பாடல்** :

"பூக்கள் தேடும் பட்டாம் பூச்சி
தேன் குடிக்கும் பட்டாம் பூச்சி
பூம்பொடி புரளும் பட்டாம்பூச்சி
தேன் குடிக்கும் பட்டாம் பூச்சி"

- குழுவாகப் பாடுதல்

- பயிற்சித்தாள் 9.2 "வண்ணத்துப்பூச்சியை வரைவோம்" வழங்குதல்.
  - வண்ணத்துப் பூச்சியின் படத்தை முழுமைப்படுத்தி வண்ணம் தீட்டுதல்.
  - வண்ணத்துப்பூச்சியின் தன்மையைக் கூறுதல்.
  - பெரிய வண்ணத்துப் பூச்சி.
  - பல்வேறு வண்ணங்கள்.
  - பறந்து செல்லும்.
  - பார்க்க நல்ல அழகு.
  - குழந்தைகளிடம் கூறும்படி சொல்லுதல்.
  - வண்ணத்துப்பூச்சியின் படங்களைக் காட்சிபடுத்துதல்.

## மதிப்பீடு

- சிறப்புகள் கூறுதல்
- குழந்தைகளுக்கு படத்தை வரைந்து முழு மைப்படுத்தவும் வண்ணம் தீட்டவும் இயல்கிறது.

## பயிற்ச்சித்தாள் - 9.3 படம் முழுமைப்படுத்துவோம் வண்ணம் தீட்டுவோம்.

**வளர்ச்சி மண்டலங்கள்** :
- அறிவுசார் வளர்ச்சி
- உடல் இயக்க வளர்ச்சி

**திறன்கள்** :
1. படங்களுக்கு வண்ணம் தீட்ட இயல்கிறது. (5)
2. கணிதப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண இயல்கிறது (46)
3. முன் எழுத்துச் செயல்பாடுகளில் ஈடுபட இயல்கிறது. (14)

**கருத்து** : பூக்களை நோக்கி வண்ணத்துப்பூச்சிகள் வருகின்றன.

**கருவிகள்** : கிரையான்ஸ்

**சூழல்** : பூக்களின் பெயர் கூறல் விளையாட்டு
- வட்டத்தில் நிற்கச் சொல்லுதல்
- ஒவ்வொருவராக பூக்களின் பெயரைக் கூறுதல்.

**செயல்முறை**

- **கதைக்கூற்று** : பூந்தோட்டக்காரரின் கதை கூறுதல்.

ஒரு இடத்தில் ஒரு பூந்தோட்டக்காரர் இருந்தார். அவர் ஏராளம் செடிகள் நட்டு வளர்த்தினார். செடிகள் பூத்துக்குலுங்குவதை எதிர்பார்த்துக் கொண்டிருந்தார். பூக்கள் அனைத்தையும் சந்தைக்கு கொண்டு சென்று விற்க வேண்டும். இதுதான் அவருடைய ஆசை. அவருடைய ஆசை செடிகளுக்குப் புரிந்து விட்டது. ஒருநாள் தோட்டக்காரர் சென்றபோது நல்ல மணம். வண்ணத்துப் பூச்சிகள் பறந்து விளையாடின. ஆனால் பூக்கள் ஒன்றையும் காணவில்லை. தேன் குடிக்க கிளிகள் வருவதுண்டு. தோட்டக்காரருக்கு மட்டும் பூக்களைப் பார்க்க இயலவில்லை. பூக்கள் ஒரு தந்திரம் செய்ததுதான் அதற்குக் காரணம். தோட்டக்காரருக்கு

மட்டும் பார்க்க முடியாத படி. அவைகள் பூத்தன. தோட்டக்காரர் கூறினார். “நான் பூ பறிக்கமாட்டேன். சந்தைக்குக் கொண்டு போகமாட்டேன்”. உண்மையா? கிளிகள் கேட்டன. உண்மைதானா? வண்ணத்துப் பூச்சிகள் கேட்டன. உண்மைதானா? அது யார் கேட்டது? யார்? செடிகள். “உண்மை”. “தோட்டக்காரர் கூறினார்.” “அப்படியென்றால் கண்ணை மூடும்” தோட்டக்காரர் கண்ணை மூடினார். “திற” தோட்டக்காரர் கண் திறந்தார். “ஹாய்! எராளம் பூக்கள்” தோட்டத்தில் பூக்கள் ஒவ்வொன்றாக வெளியே வந்தன. உங்களுக்கு அந்த பூக்கள் மறைந்திருப்பதைப் பார்க்க வேண்டாமா? பயிற்சித்தாள் வழங்குதல். வண்ணம் தீட்டி பூக்களை வெளியே கொண்டு வாருங்கள்.

- பயிற்சித்தாள் 9.3 ‘படம் முழுமைப் படுத்துவோம் வண்ணம் தீட்டு வோம்.’ வழங்குதல்.
  - குழந்தைகள் பூக்களின் படம் வரைந்து முழுமையாக்குதல்.
  - பூந்தோட்டத்திற்கும் வண்ணத்துப் பூச்சிகளுக்கும் வண்ணம் தீட்டுதல்.
  - பூக்களா? வண்ணத்துப்பூச்சிகளா? கூடுதல் எது?
  - கூடுதல் உள்ளவற்றுக்கு சரியிடுங்கள்.

## மதிப்பீடு

- கட்டத்திற்குள்ளில் மட்டும் வண்ணம் தீட்டப் பட்டுள்ளது.
- பூக்களை ஒப்பிடவும் கணித மொழியில் வெளியிடவும் இயல்கிறது.

## மையக் கருத்து: 10 – ஓணம், ரம்சான்

பூக்கோலம் இடுவதற்கும் நடிப்பதற்கும் குழந்தைகளுக்குப் பிடிக்கும். முக மூடி அணித்துள்ள நடிப்பு என்றால் விருப்பம் கூடுதலாகும். மாவேலியின் முக மூடி அணிந்து டும் டும் தாளமிட்டு பாடி ரசித்த பின்பு கதைக்கூற்றின் பகுதியாக பயிற்சித்தாள் கொடுக்க வேண்டும்.

### செயல்பாட்டு வரிசை

1. சுதந்திர விளையாட்டுகளில் ஈடுபடுதல்.
(ஊஞ்சல் ஆடுதல், பந்துவிளையாட்டு)
↓
2. ஓணப் பாடல்கள் பாடுதல்.
↓
3. கதைக்கூற்று பயிற்சித்தாள் 10.1 "பூக்கோலத்திற்கு வண்ணம் தீட்டலாம்" – வழங்குதல்.
↓
4. கதைக்கூற்று, பயிற்சித்தாள் 10.2 "வேற்றுமை கண்டறிந்து கூறலாம்" – வழங்குதல்.
↓
5. கதைப்பாடல்கள்/உரையாடல்பாடல்கள் கேட்டல். ஒலி/ஒளி
↓
6. பயிற்சித்தாள் 10.3 "மருதாணி வரையலாம்" – வழங்குதல்.

### பயிற்சித்தாள் – 10.1 "பூக்கோலத்திற்கு வண்ணம் தீட்டலாம்"

**வளர்ச்சி மண்டலங்கள்** :
- உடல் இயக்க வளர்ச்சி
- படைப்பு மற்றும் அழகியல் மேம்பாடு

**திறன்கள்** :
1. சுதந்திரமாக படங்கள் வரைந்து வண்ணம் தீட்ட இயல்கிறது. (5)
2. இயற்கையை ரசிப்பதற்கும் படத்தின் வாயிலாக வெளிப்படுத்தவும் வண்ணம் தீட்டவும் இயல்கிறது. (79)

**கருத்துகள்** :
- ஓணம், ரம்சான் போன்ற பல்வேறு விழாக்கள் உள்ளன.
- ஒவ்வொன்றிற்கும் அதற்குரிய சிறப்புகள் உள்ளன.

**கருவிகள்** : கிரையான்ஸ்

**சூழல்** : ஓணத்துடன் தொடர்புடைய அனுபவங்களைக் கூறுதல்.

### செயல்முறை

- **கதைக்கூற்று** : பூக்களின் மாநாடு. அனைத்தும் பல வீடுகளில் வாழ்கின்றன. காற்று வீசும் போது பலவித மணங்கள் வரும். இவ்வாறு மட்டுமே பூக்கள் ஒருவருக்கொருவர் அறிந்து கொள்கின்றனர். சிலநேரங்களில் குழந்தைகள் மாலைகள் கட்டியும் தலையில் சூடியும் சில பூக்களை ஒன்றாகச் சேர்ப்பதுண்டு. ஒருவருக்கொருவர் பார்க்க பூக்களுக்கு மிகவும் ஆசை. அவர்கள் காற்றிடம் காரியத்தைக் கூறினர். காற்று ஒரு பூக் கூடையுடன் பூக்கள் அனைத்தையும் மெதுவாக எடுத்து ஓரிடத்தில் கொண்டுவந்து சேர்த்தது.

அய்யோ! எங்களுக்கு ஒருவரை ஒருவர் பார்க்க முடியவில்லையே. எனக்கு மூச்சு திணறுகிறதே என பூக்கள் புகார் கூறின. காற்று சுற்றிச் சுற்றி வீசியது. பூக்களை வட்டமாகச் செய்தது. ஒவ்வொரு தட்டிலும் அமரச் செய்தது. இப்போது அவர்களுக்கு அனைவரையும் பார்க்கலாம். பூக்கள் மகிழ்சியடைந்தன. அப்போது அந்த வழியாக வந்த குழந்தைகள் அவ்வழகான காட்சியைப் பார்த்தனர். அவர்கள் நாட்டு மக்களை அழைத்துக் காட்டினர். பூக்களின் ஆசையை நிறைவேற்ற குழந்தைகளும் நாட்டு மக்களும் அனைத்து வீடுகளிலும் பூக்கோலம் போட்டனர். ''பூக்கோலத்தை அழகாக்குங்கள்". பயிற்சித்தாள் வழங்குதல்

- பயிற்சித்தாள் 10.1 "பூக்கோலத்திற்கு வண்ணம் தீட்டலாம்" - வழங்குதல்.
  - படத்தில் பார்த்ததைக் கூறுதல்
  - பூக்கோலத்தில் பல வண்ணப் பூக்களை வைத்தல்
  - பூக்கோலத்தைக் காட்சிப்படுத்துதல்.

## மதிப்பீடு

- நுட்பமாக நிறம் கொடுக்க இயல்கிறது.
- படத்தின் கவர்ச்சி

## பயிற்சித்தாள் - 10.2 "வேற்றுமை கண்டறிந்து கூறலாம்"

**வளர்ச்சி மண்டலங்கள்** :
- உடல் இயக்க வளர்ச்சி
- அறிவுசார் வளர்ச்சி

**திறன்கள்** : 1. பொருட்கள்/படங்களை உற்றுநோக்கி வேறுபாடுகளைப் பிரித்துக் கூற இயல்கிறது. (33)
2. சுதந்திரமாக வண்ணம் தீட்ட இயல்கிறது (5)

**கருத்து** : ஓணம், ரம்சான் போன்ற பல்வேறு விழாக்கள் உள்ளன. ஒவ்வொன்றிற்கும் அதற்குரிய சிறப்புகள் உள்ளன.

**கருவிகள்** : கிரையான்ஸ்

**சூழல்** : ஓணத்துடன் தொடர்புடைய பாடலைக் குழந்தைகளும் ஆசிரியையும் சேர்ந்து பாடுதல்.

**செயல் முறை**

- **கதைக்கூற்று** : மழை நின்றதும் பூக்கள் விரிந்தன. நிலவு படர்ந்தது. ஓணக்காலமானது. குழந்தைகளுக்கு உற்சாகமானது. உஞ்சல் போடப்பட்டது. பந்து விளையாடினர். பாடல் பாடினர். மாவேலி வேடம் போட்டனர். செண்டைமேளம் அடித்து சாலையில் நடந்தனர். 'டும் டும் டும் டும்' இந்த நேரத்தில் தான் உண்மையான மாவேலி நாட்டைப் பார்க்க வந்தார். மாவேலி வந்தபோது இதோ வேறொரு மாவேலி! மாவேலி எதிரே வந்த மாவேலிக்கு முன்னால் வந்து நின்றார். இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்தனர். செண்டை மேளக்காரர்கள் செண்டை அடித்தனர். "டும், டும், டுண்ட, டும் டுண்டக்கம், டுண்டக்கம், டுண்டா டும் - (நடித்தல்) மாவேலி 'எதிரே வந்த மாவேலியிடம் கேட்டார் ''யார்' எங்கிருந்து வருகிறீர்?" "நான் மாவேலி, பாதாளத்திலிருந்து வருகிறேன். நீ யார்?"

மாவேலி எதிரே வந்த மாவேலியிடம் கேட்டார். "நான் கொச்சு ராமன் வீட்டிலிருந்து வருகிறேன்" மாவேலி சிரித்தார். கொச்சு ராமனும் சிரித்தார். குழந்தைகளும் சிரித்தனர். இருவரும் ஒரேபோல் இருக்கின்றனர். அவர்கள் ஒருவருக் கொருவர் கூறினர். சிறு வேறுபாடு உள்ளது. கண்டுபிடிக்கலாமா?

- பயிற்சித்தாள் 10.2 "வேற்றுமை கண்டறிந்து கூறலாம்" வழங்குதல்
  - பயிற்சித்தாள் வழங்குதல்.
- **படவாசிப்பு**
  - படத்தில் பார்த்ததைக் கூறுதல்.
  - மாவேலி நிற்பது எங்கே?
  - மாவேலியின் கையில் உள்ளது என்ன?
  - முதல் படமும் இரண்டாவது படமும் ஒரே போல் உள்ளதா?
  - என்னென்ன வேறுபாடுகள் உள்ளன?
  - படத்தில் வண்ணம் தீட்டி காட்சிப்படுத்துதல்.

## மதிப்பீடு

- படத்தில் பார்த்ததைச் சொல்ல இயல்கிறது.
- வேறுபாடுகளைக் கண்டறிந்துக் கூற இயல் கிறது.
- வண்ணம் தீட்டப்பட்டதன் நுட்பம்.

## பயிற்சித்தாள் – 10.3 மருதாணி வரையலாம்.

**வளர்ச்சி மண்டலங்கள்** :
- அறிவுசார் வளர்ச்சி
- உடல் இயக்க வளர்ச்சி

**திறன்** : சுதந்திரமாக படங்களுக்கு வண்ணம் தீட்ட இயல்கிறது. (05)

**கருத்துகள்** :
- ஓணம், ரம்சான் போன்ற பல்வேறு விழாக்கள் உள்ளன.
- ஒவ்வொன்றிற்கும் அதற்குரிய சிறப்புகள் உள்ளன.

**கருவிகள்** : மருதாணி, கிரையான்ஸ்

**சூழல்** : விழாக்களுடன் தொடர்புடைய அனுபவங்களைக் கூறுதல்.

**செயல்முறை** :

"மருதாணித்தோட்டத்திலுள்ள வண்ணத்துப் பூச்சியே கறுப்பு வளையல் கைகளில் நீ பார்த்தாயா. புத்தம் புது மருதாணி அழகாய் மின்னும் மருதாணி."

"மருதாணி தோட்டத்திலுள்ள வண்ணத்துப் பூச்சியே. முத்துவளையல் கைகளில் நீ பார்த்தாயா புத்தம் புதிய மருதாணி அழகாய் மின்னும் மருதாணி." பாட்டு பாடுதல், மருதாணி வரைந்த அனுபவம் உள்ளவர்களை வைத்துக் கூறச் செய்தல்.

- பயிற்சித்தாள் 10.3 'மருதாணி வரையலாம்' – வழங்குதல்

அனைவரும் படத்தைப் பார்த்து அவர் களுக்கே உரிய முறையில் வரைதல்.

தொடர்ந்து பாடலை மீண்டும் பாடுதல், மருதாணி வரைந்து கொடுக்க வேண்டும். மருதாணி வரைந்த கைகளின் படம் பார்த்து உரையாடல் நடத்துதல். கையின் பட அட்டை கொடுத்தல்/ குழந்தைகளின் கைகளை காகிதத்தில் வைத்து வெளிக்கோடு வரைந்து கொடுத்தல்.

அதற்குள்ளே அவர்களுக்கு விருப்பமான முறையில் மருதாணி படங்கள் வரையட்டும்.

## மதிப்பீடு

- படத்தில் உள்ள பொருட்கள் கூடுதலாக உள்ளதைக் கண்டறிந்து வட்டமிடப்பட்டுள்ளது.
- பொருத்தமான வண்ணம் தீட்டப்பட்டுள்ளது.
- வண்ணம் தீட்டப் பட்டுள்ளதிலுள்ள மேன்மை.